

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 31st October 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

Block Advisory Committees

* 731 *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY (on behalf of Sri P. G. Manickam) : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவிலே எத்தனை பிளாக் டெவலப்மெண்டு அட்வைசரி கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இக்கமிட்டிகளிலே எந்தெந்தக் கமிட்டிகளிலே ஹரிஜனங்கள் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Sixteen.

(*b*) Ten.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பிளாக் டெவலப்மெண்ட் ஏரியாக்களை ஏற்படுத்தும்போது, அந்தந்த ஜில்லாக்களின் பிளானிங் கமிட்டியில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஏற்படுத்தப்படுகிறதா அல்லது சர்க்காரின் அபிப்பிராயப்படி ஏற்படுத்தப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலெக்டர் அவர்களின் அபிப்பிராயத்தைக்கேட்டு அதன் பேரில் ஆலோசனை செய்து ஏற்படுத்தப்படுகிறது.

SRI R. KRISHNASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, அட்வைஸரி கமிட்டிகளில் இருக்கும் மெம்பர்களின் எண்ணிக்கை என்ன ? இந்த எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கத்திற்கு ஏதாவது நோக்கம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not have the exact information with me now.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இதில் ஹரிஜனங்கள் என்பதில் அருந்ததியர்கள் என்பவர்கள் உட்படுவார்களா ? அப்படியானால் எத்தனை பேர்கள் இதில் இருக்கிறார்கள் ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI K. B. S. MANI : கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானியில் இருக்கும் அட்வைஸரி கமிட்டியில் ஹரிஜனங்களை நியமிக்கப்படாததற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பவானியிலுள்ள கமிட்டியில் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள்.

Export of jaggery

* 732 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have requested the Centre to increase the quota for the export of jaggery to other countries like Malaya, Singapore, Ceylon, etc.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The question does not arise as jaggery is licensed freely for export.

Poigaimalai Reserve Forest

* 733 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any representation, dated 26th November 1957 was received from the President, Ananthapuram Krishi-Thozhilalar Co-operative Society, Limited, Kadukkarai, Azhagiapandipuram, Thovala taluk, Kanyakumari district, regarding the extension of the lease period of the Poigaimalai Reserve Forest; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The answer is in the affirmative.

(*b*) The Ananthapuram Krishi-Thozhilalar Co-operative Society, Limited, Kadukkarai, has since been granted an extension of lease for a further period of three years.

Scholarship to college students

* 734 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள கல்லூரிகள் எத்தனை? (ஜில்லாவாரியாக).

(ஆ) சர்க்கார் நடத்தும், தனியார் நடத்தும் கல்லூரிகள் எத்தனை?

(இ) 1957–58-ல் ஒவ்வொரு கல்லூரியிலும் படிக்கும் மாணவர்களுக்கு—

(1) எத்தனை பேர்களுக்கு ரெசிடென்ஷியல், நான்-ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டது?

(2) எவ்வளவு தொகை?

(ஈ) அதில் (1) பின்தங்கியவர்கள், (2) தாழ்த்தப்பட்டவர்கள், (3) மற்றவர்கள் எத்தனை பேர்?

(உ) மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தை குறைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: A statement [a] is laid on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், சர்க்காரால் நடத்தப்படும் கல்லூரிகளைவிட மூன்று மடங்கு அதிகப்படியாக பிரைவேட் மானேஜ்மெண்டார் கல்லூரிகளை நடத்தி வருகிறார்கள். அந்தக் கல்லூரிகளில் எல்லாம் ஜாதியின் அடிப்படையில் 100-க்கு 80 பங்கு கல்லூரிகளில் எந்த ஜாதியினரால் நடத்தப்படுகிறதோ அந்த ஜாதியினருக்குத்தான் சலுகை அளிக்

[a] Printed as Appendix I on page 268 *infra*.

31st October 1958]

கப்பட்டு வருகிறது. இதனால் மற்றவர்களுக்கு இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இதைத் தடுக்கின்ற முறையில் சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மற்றவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை என்று சொல்லுவது உண்மையல்ல. ஆர்ட்ஸ் காலேஜ் களிலும், ஸயன்ஸ் காலேஜ்களிலும் எத்தனை மாணவர்கள் வந்தாலும் சேர்த்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கல்லூரி விடுதி களில் இருக்கும் மாணவர்களுக்கு குறித்த நேரத்தில் ஸ்காலர்ஷிப் கிடைப் பதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றது. இதை விரைவு படுத்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயங்களில் தாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின் றது.

SRI K. VINAYAKAM : Sir, from the paper placed in the table of the House, in answer to clauses (*c*) and (*d*) of the question it is stated that the time and labour involved in collecting the particulars required will not be commensurate with the object in view. Is it absolutely impossible for the college authorities or even for the Director of Harijan Welfare to supply us with the information asked for? This information is absolutely necessary in the interests of the Backward Classes as well as the Scheduled Castes.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I cannot make a searching enquiry in respect of 92 colleges. If the total number of scholarships given in the year 1957–58 is required, I can give that information.

SRI M. KALYANASUNDARAM : On point of order, Sir, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற சமயத்தில் ஒவ்வொரு கல்லூரியில் இருக்கும் மாணவர்களில் எத்தனை பேருக்கு ரெசிடென்ஷியல், நான்-ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவிப்பது கஷ்டம் என்று சொன்னார்கள். மொத்தமாக எவ்வளவு கொடுக்கப் பட்டிருக்கிறது என்கிற விவரத்தை சொல்லுவதில் கஷ்டம் ஒன்றுமில்லை என்று நம்புகிறேன். இந்த விபரம் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டி லிருந்தே அறியலாம். ஆகவே . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வியின் ஒரிஜினல் தமிழில் இருக்கிறது. அதில், கேள்வி (இ)-யி1957–58-ல் ஒவ் வொரு கல்லூரியிலும் படிக்கும் மாணவர்களுக்கு எத்தனை பேர்களுக்கு ரெசிடென்ஷியல், நான்-ரெசிடென்ஷில் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டது ? என்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விபரம் சேகரிப்பது . . . . . .

SRI M. KALYANASUNDARAM : The question is very clear.

In clause (*c*) it has been asked : (i) the number of College students who were granted residential and non-residential scholarship in 1957–58, and (ii) the amount granted therefor.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have got the Tamil version of the question which is the original question. Perhaps the translation is wrong.

[31st October 1958

SRI M. KALYANASUNDARAM: Then, I am not pressing my point of order.

SRI S. M. ANNAMALAI: ஸார், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆறு கல்லூரிகள் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆறு கல்லூரி கள் அங்கு இருந்தும் அங்கு மாணவர்கள் இடம் கிடைக்காமல் திண்டாடு கிறார்கள். ஆகவே வேலூரில் இருக்கும் முஸ்லீம் உயர்நிலைப் பள்ளியை கல்லூரியாக மாற்றுவதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது இருக்கிற கல்லூரி களுக்கே மாணவர்கள் இல்லை. அப்படியிருக்கும்போது அதிகப்படியாக காலேஜ்களை ஏற்படுத்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசமில்லை.

Basic and Basic Training Schools

*735 Q.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் நடைபெறும் ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் நடந்த தொழில் மூலம்—

(1) கடந்த 3 ஆண்டுகளில் ?

(2) இந்த ஆண்டில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(இ) ஆதாரக் கல்விப் பள்ளிகள் எத்தனை ?

(ஈ) அவற்றின்மூலம் மேற்கண்ட 3 ஆண்டுகளில் கிடைத்த தொழில் வருமானம் எவ்வளவு ?

(உ) இந்த எல்லா ஸ்தாபனங்களிலும் விற்பனை இன்றித் தேங்கி இருக்கும் பொருள்களின் மதிப்பென்ன ?

(ஊ) இப் பள்ளிகள் செய்த சமூக சேவையின் விவரம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: A statement [a] is placed on the table fo the House.

SRI A. VEDARATHNAM: தலைவர் அவர்களே, ஆதாரப் பள்ளி களில் படிக்கின்ற மாணவர்களுக்கு அவர்களுடைய சுயதேவைப் பூர்த்தி விஷயமாய குறிப்பிட்டிருக்கின்ற டைரக்டர் அவர்களுடைய ப்ரொஸீடிங்ஸ்-ஸில் மினிமம் அவர்களுக்கு தேவைப்படுகிற வருமானம் வரவேண்டு மென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்விதம் எல்லாப் பள்ளிகளிலும் இந்த மினிமம் வருகிறதா ? இல்லையென்றால் இந்த மினிமம் ஒவ்வொரு பள்ளிகளிலும் வருவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்கான புள்ளி விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

SRI R. KRISHNASAMI NAIDU: கனம் சபாநாயகர் அவர்களே, ஆதார ஆரம்பப் பள்ளிகளில் மாணவ மாணவிகள் நூற்கும் நூற் சிட்டங்கள் எல்லாம் அந்தந்த பகுதிகளில் இருக்கும் பயிற்சிப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்விதம் கொடுக்கப்பட்ட நூற் சிட் டங்கள் அங்கே தேங்கி இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆதலால் இவ்விதம் தேங்கிக்கிடந்து அதன் தரம் கெட்டுப்போவதாகவும் தெரிகிறது. இதை உபயோகிப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப்பற்றி கவனிக்கச்சொல்லு கிறேன்.

[a] Printed as Appendix II on pages 268–269 infra.

31st October 1958]

SRI M. D. THIAGARAJA PILLAI : தலைவர் அவர்களே, ஆதாரப் பள்ளிகளில் அனேகமாக மாணவ மாணவிகள் விவசாயத் தொழிலே முக்கியமாகக் கொண்டிருப்பதால் அந்தந்த பாடசாலையிலுள்ள மாணவ மாணவிகளுக்கு வேண்டிய காய்கறி தான்யங்களை உற்பத்தி செய்து கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா !

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு வேண்டிய நிலம் வேண்டும். அதற்கு வேண்டிய மற்ற உதவிகளும் அளிக்கப்பட்டாக வேண்டும். இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

SRI K. B. S. MANI : ஸார், இப்போது அனேகமாக பல பள்ளிக்கூடங்களில் இட வசதியில்லாமலும், மற்ற வசதிகள் இல்லாமலும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது, ஆகவே இந்த வசதிகளைச் செய்து கொடுப்ப தற்காக சர்க்கார் மூலமாகவே வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the question relates completely to a different item altogether.

SRI R. SRINIVASA IYER : ஸார், அமைச்சர் அவர்கள் தந்திருக் கிற பதில் வால்யூ ஆப் அன்ஸோல்ட் ஆர்ட்டிகில்ஸ் என்பதில் 2,28,497 ரூபாய் என்று காணப்படுகிறது. இவ்விதம் விற்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வாங்குவதற்கு ஆள் இல்லாதது தான் காரணம்.

SRI M. P. PERIASAMI : மோகனூர் ஹைஸ்கூலில் சாகுபடிக்குப் போதுமான அளவு இடம் இருப்பதை விவசாயம் செய்வதற்கு கொடுப் பதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா ?

MR. SPEAKER : மூலக்கேள்வியிலிருந்து இந்த உபகேள்வி எழ வில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பயிற்சிப் பள்ளிக் கூடங்களில் இருந்து கிடைக்கும் நூல்களை தேசீய வட்டார ஸ்தாபனத்தில் கொடுத்து நெசவு செய்து உபயோகப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு இப்போது போடப்பட்டிருக்கிற உத்தரவு எப்படியென்றால் இதில் கிடைக்கின்ற வரு மானத்தைக்கொண்டு, அந்தந்த பள்ளிக்கூடங்களில் மிட் டே மீல்ஸ்க்காக செலவு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : ஆதாரக் கல்வித் திட்டத்தில் மிக முக்கியமான அம்சம் இந்த சுய தேவைப் பூர்த்தி என்பது. இந்த விஷயத்தில் சரியான கவனம் செலுத்தப்படாத காரணத்தினால் பல பள்ளிகள் அந்த லட்சியத்தை அடையவில்லை. அதிலே அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த அரசாங்கம் உத்தரவு போட முயற்சியெடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வரையில் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை சர்க்காரே எடுத்துக் கொண்டு கிராண்ட் கொடுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொண்டு கொடுத்ததால் அவர்கள் அதிக ஊக்கம் செலுத்தாமல் இருந்தார்கள். இப்போது உற் பத்தி ஆகக் கூடிய பொருள்கள் அவர்களுடைய நன்மைக்கே உபயோகப் படும் என்று சொல்லும்போது இந்த நிலைமை அபிவிருத்தியாகும் என்று நினைக்கிறேன்.

[31st October 1958

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, ஆதாரப் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறும் ஆசியர்களுக்கு தொழில் கல்வியளித்து பின்னர் அவர்கள் ஆசிரியர்களாகும்போது தொழில் மூலம் கல்வி கற்பிக்க அவர் களுக்கு பயிற்சி ஏதேனும் அளிக்கப்படுகிறதா ? தொழில் கல்வி மூலம் கல்வி கற்பிப்பதைப் பற்றி கவனம் செலுத்தப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பயிற்சி தான் அங்கு கொடுக்கப்படுகிறது. கனம் அன்பழகன் அவர்களே அந்தப் பயிற்சி நிலயங்களுக்குப் போய் நான்கு நாட்கள் இருந்து அந்தப் பயிற்சி நிலையங் கள் எப்படி வேலே செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRIMATHI DR. T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்தத் தொழில்கள் மூலமாக வரக்கூடிய வருமானத்தை மதியச் சாப்பாட்டுக்குப் பயன் படுத்தலாம் என்று சர்க்கார் அங்கிகாரம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஹாஸ்டலில் இருந்து படிப்பது முக்கிய குறிக்கோளாக உள்ள ஹாஸ் டல் விஷயத்தில், சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்தலாம் என்று சர்க்கார் உத்திரவு போடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது வரும் வருவாய் மதிய உணவுக்குப் போதுமான அளவுள்ளதாகத்தான் இருக் கும் என்று கருதி இந்த உத்திரவை அரசாங்கம் போட்டிருக்கிறது. அதற்கு மேல் வருவாய் வந்தால் ஹாஸ்டலிலே உபயோகப்படுத்தலாம் என்ற திருத்த உத்தரவு போடும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

Medical Colleges

* 736 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) (1) சென்னை வைத்தியக் கல்லூரி,

(2) மதுரை வைத்தியக் கல்லூரி,

(3) ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி,

(4) தஞ்சை வைத்தியக் கல்லூரி,

ஆகியவைகளிலே ஒவ்வொரு கல்லூரியிலும் பூர்வாங்க வைத்திய வகுப் பிலே 1958-ம் ஆண்டில் எத்தனை மாணவர்களும், மாணவிகளும் சேர்க்கப் பட்டார்கள் ?

(ஆ) இவர்களுள், ஹரிஜன மாணவர்களும் மாணவிகளும் எத்தனை பேர் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Among the four Government Medical Colleges, the Pre-medical course is conducted only in the Madras Medical College, Madras, wherein 96 men students have been admitted this year. The other selected students have been admitted in the various Arts Colleges in the State. The 94 women students selected for the Pre-medical course have been admitted in the Queen Mary's College, Madras, and the Holy Cross College, Tiruchirappalli.

(*b*) Thirty-two men and four women.

SRI A. A. RASHEED : May I know from the Hon. Minister whether the district-war quota fixed for admission into these colleges is based on the population of the district or on the basic needs of the district?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the district-war quota is given on the basis of population.

31st October 1958]

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸார், இந்தக் கல்லூரிகளில் சேருவதற்கு மனுப் போட்ட ஹரிஜன மாணவ மாணவிகளுடைய மனுக்களெல்லாம் அங்கீகரிக்கப்பட்டனவா ? அங்கீகரிக்கப்படாத மனுக்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லாம்தான் என்று நினைக்கிறேன்.

Industrial Co-operative for Harijans

* 737 Q.—SRI K. B. S. MANI (on behalf of Sri P. G. Manickam) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே ஹரிஜனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் 40 கூட்டுறவு தொழிற்சாலைகளும் எந்தெந்த இடங்களிலே இருக்கின்றன ?

(ஆ) இத் தொழிற்சாலைகளிலே என்னென்ன தொழில்கள் செய்யப்படுகின்றன ?

(இ) ஒவ்வொரு கூட்டுறவு தொழிற்சாலையிலும் எத்தனை ஹரிஜனங்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் ?

(ஈ) ஒவ்வொரு கூட்டுறவு தொழிற்சாலையிலும் உள்ள மூலதனம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : ஸார், இங்கு கொடுக்கப் பட்டிருக்கிற அறிக்கையில், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆனந்தம் சோப் பாக்டரி ஒன்று ஒதுக்கியிருப்பதாகவும், அதில் மெம்பர்கள் 28 பேர்கள் என்றும், ஷேர் கேபிடல் ஒன்றுமேயில்லையென்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷேர் கேபிடலே இல்லாமல் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்ல முடியும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸார், கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி தஞ்சை ஜில்லாவில் கூட்டுறவுத் தொழில் அதிகமில்லை என்று தெரிகிறது. தஞ்சை ஜில்லாவில் வசிக்கின்ற ஹரிஜன மக்கள் வருஷத்தில் ஏறத்தாழ 5 மாதங்கள்தான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற மாதங்களில் வேலை ஒன்றுமில்லாமல் இருக்கிறார்கள். ஆகையால் தஞ்சை ஜில்லாவில் அதிகமாக கூட்டுறவுத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் ஏதாவது துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இந்த் கூட்டுறவு சொஸைடிகள் கிராம மக்களால் ஏற்படுத்தப்படுகிறது. கனம் அங்கத்தினர் அக்கறை எடுத்து அந்தப் பகுதியில் சொஸைடிகள் ஆரம்பிக்க முயற்சிகள் செய்வாரானால், அரசாங்கம் வேண்டிய உதவியளிக்கும்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த சொஸைடிகளில் இதர ஜாதியினரும் சேர்ந்து வேலை செய்ய அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : பின் தங்கிய மக்கள் கூட அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

---

[a] Printed as Appendix III on pages 269-270 infra.

[31st October 1958

Sri V. K. KOTHANDARAMAN : ஆனந்தம் சோப் பாக்டரி, குடியாத்தத்தில் ஆரம்பித்து இப்போது மூடு விழா கூட நடத்தப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? சர்க்கார் கொடுத்திருக்கும் பணத்தை திருப்பிப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri P. KAKKAN : இதனுடைய நிலைமை எனக்குத் தெரியாது. ஒன்றை வைத்துக் கொண்டு பிரமாதப் படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

Emerald Dam in the Kundah Project

* 738 *Q.*—**Sri K. SATTANATHA KARAYALAR** : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the area acquired for Emerald Dam in the Kundah Project; and

(*b*) the rate at which the Red Hill Estate was proposed to be acquired?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Six acres of land have so far been acquired.

(*b*) Does not arise, as lands in the Red Hill Estate have not so far been acquired or proposed to be acquired for the Project.

Sri K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, குந்தா திட்டத்தின் கீழ் வரக் கூடிய நிலங்களை ஆர்ஜிதம் செய்து எடுத்துக் கொள்வதிலே அந்த நிலங்களுக்கு கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் விலை சரியானதல்ல என்று சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ? அது விஷயமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri V. RAMAIAH : குந்தா திட்டத்திற்கு வேண்டிய நிலமெல்லாம் லேண்ட் அக்விஸிஷன் ஆக்ட் முறைப்படித்தான் வாங்கப் பட்டு வருகிறது.

Sri K. VINAYAKAM : While acquiring lands for the Emerald Dam, is it a fact that the officer entrusted with the work has put the value of the land at a higher rate when compared with the prevalent rates in the neighbourhood and that he has included also the value of the small plants there at present, by taking into account their yield after 40 years? If so, will the Government make an enquiry into the matter and rectify the irregularity?

The Hon. Sri V. RAMAIAH : Sir, the hon. Member's question contains so many assumptions. I have already stated that the whole acquisition is carried on under the Land Acquisition Act. I do not think there will be any room for such serious irregularities in the matter of acquisition.

Sri T. K. SUBBIAH : ஸார், குந்தா திட்டத்திற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு முன்பாக 50 சத விகிதம் முதலீட்டிலே அட்வான்ஸாகப் பணம் கொடுக்கப்படுகிறதாகத் தெரிகிறது. இது உண்மையா ?

The Hon. Sri V. RAMAIAH : நிலத்திற்கு 50 சதவீதம் முன் கூட்டிக் கொடுப்பதில்லை. ஆனால் அங்கு இருக்கக் கூடிய பயிர்களுக்கு காம்பென்ஸேஷன் என்ற முறையிலே, அங்கு இருக்கக் கூடிய சிறு விவசாயிகள் நீண்ட காலமாக பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க 75 சதவீதம் வரையில் மதிப்பிட்டு

31st October 1958]

உடனடியாகக் கொடுத்து பின்னர் லேண்ட் அக்விஸிஷன் ஆபீஸர் எந்த முறையில் தீர்ப்புச் சொல்லுகிருரோ அந்த முறையில் அப்போது அந்தத் தொகையை மொத்தத்திலிருந்து கழித்து பாக்கி கொடுக்கப்படுகிறது.

Sri J. MATHA GOWDER : குந்தா திட்டத்திற்கு வேண்டிய பூமிகளை ஆர்ஜிதம் செய்தது எந்த வருஷம், கொடுக்கப்பட வேண்டிய தொகைகளை எந்த வருஷத்தில் கொடுத்தார்கள் ? உத்தேசமாக எத்தனை வருஷம் பிடிக்கும் எல்லாத் தொகையையும் கொடுக்க ?

The Hon. Sri V. RAMAIAH : இதிலே கொடுப்பதற்கு பல ஆண்டுகள் நீடிக்க வேண்டியதில்லை. துரிதமாக ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு சீக்கிரமாகக் கொடுக்க வேண்டுமென்றுதான் முயற்சிக்கிறோம்.

Sri M. KALYANASUNDARAM : ஸார், எமரால்ட் எஸ்டேட் என்று சொல்லக்கூடிய எஸ்டேட் ஒனரிடத்திலிருந்து ஆர்ஜிதம் செய்யப் பட்டதா ? எத்தனை ஏக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட்டது ? அந்த விஸ்தீரணத்தில் எவ்வளவு மரங்கள் இருந்ததாகக் கூறப்பட்டது ? மரத்திற்காக எத்தனை நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது ?

The Hon. Sri V. RAMAIAH : ஆரம்பத்திலேயே நான் நஷ்ட ஈடு ஒன்றும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னேன். எமரால்ட் எஸ்டேட் என்பதைப் பற்றி தெரியாது. இந்த கேள்வியில் இருப்பது ரெட்ஹில் எஸ்டேட்.

Sri M. KALYANASUNDARAM : Sir, clause (*a*) of the question relates to Emerald Dam.

The Hon. Sri V. RAMAIAH : Emerald Dam is different from Emerald Estate. The question relates to Red Hill Estate. No compensation has been paid to the owners of this Estate.

Sri K. SATTANATHA KARAYALAR : குந்தா திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் செய்ததிலே தவறு இருந்தது என்று எந்த உத்தியோகஸ்தர் மீதாவது நடவடிக்கை எடுககப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri V. RAMAIAH : நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட அத்தனை பிரச்னைகளும் தீர்ந்தபாடில்லை. விரைவாக நல்ல முறையில் செய்யவேண்டு மென்றுதான் ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு பரிசீலனை செய்து வருகிறோம்.

Sri K. SATTANATHA KARAYALAR : On a point of order, Sir. My question is whether the Government have taken any action against any officer in regard to acquisition of any village for the Kundah Project. But there was no answer to that particular question.

Mr. SPEAKER : How can that be a point of order? I cannot force the Minister to give an answer. If the hon. Member is not satisfied he can put a separate question or move a vote of censure against the Minister.

Sri M. KALYANASUNDARAM : எமாரல்டு எஸ்டேட் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக அப்பொழுது அங்கு கலெக்டராக இருந்த அதிகாரியின் மீதும் இன்னும் சில அதிகாரிகள் மீதும் சர்க்காருக்குப் புகார் வந்ததுண்டா ? அந்தப் புகார்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

Mr. SPEAKER : I think the hon. Member must put a separate question. The question is out of order.

[31st October 1958

SRI M. KALYANASUNDARAM : How is it out of order?

MR. SPEAKER : I have ruled it out of order. He cannot refer to individual officers and their conduct. If he gives notice of a separate question, I shall examine its admissibility on its merits. I am afraid the Leader of the Communist party is questioning my ruling. I would say that questions about individual officers cannot, and should not, in fairness to them, be put as supplementaries. As it is, he is putting the officer and the Minister in a difficult situation which cannot be permitted in a supplementary.

SRI M. KALYANASUNDARAM : With due respect to you, Sir, under what rule, am I prevented from putting such questions?

THE HON. SRI C. SUBRAMANIAM : The main question relates to the area acquired for the Emerald Dam and the rate of compensation paid or to be paid to the Red Hill Estate. Certainly, the question of disciplinary action does not arise. And when the Hon. Speaker says it does not arise, it is rather strange that the Leader of the Communist Party should ask under what rule it does not arise.

MR. SPEAKER : I have got the rule here, the rule of relevancy. (Laughter.)

Andipatti-Theppampatti road

*739 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, ஆண்டிப்பட்டி-தெப்பம்பட்டி ரோடு போட்டு எத்தனை வருடங்களாகிறது ?

(ஆ) அந்த ரோடு மெட்டல் (metalling) செய்யாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Five years.

(*b*) Metalling of the above road has not been included in any of the approved programmes or in the Second Five-Year Plan.

SRI N. R. THIAGARAJAN : முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவங்கப்பட்ட வேலை பூர்த்தியாகாமல் இருந்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? இப்படி பல ரோடுகள், கட்டிடங்களை பாதியிலேயே நிறுத்தி விடுவது நல்லதுதானா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஜில்லா போர்டு ரோடு. ஜில்லா போர்டு நடவடிக்கை எடுத்து நடத்த வேண்டியது. அது முக்கியமான ரோடாக இருக்குமேயானால், கனம் தியாகராஜன் அவர்கள், ஸ்பெஷல் ஆபீசர் அவர்களிடத்தில் சொல்லி, வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

31st October 1958]

Construction of buildings under the Development Schemes

* 740 *Q.*—Sri A. A. RASHEED: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there is wastage in the construction of buildings under Block Development and National Extension Service Schemes; and

(*b*) whether the Government have issued instruction to the authorities for the strict adherence to the specifications of the buildings' constructions?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) The construction of buildings is done according to standard specifications. Minor alterations without any increase in the cost of construction, are, however, permitted to suit local traditions and rural architecture. The Government have repeatedly been emphasising that the cost of the buildings should be kept down, without sacrificing utility and efficiency.

Sri A. A. RASHEED: Is the Hon. Minister aware that some of the buildings constructed under the National Extension Service Scheme have later on been found to be defective?

The Hon. Sri C. SUBRAMANIAM: This is a very general question. Unless particular instances are given, I will not be able to answer.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN: இந்த அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிராமாந்திரப் பகுதிகளிலும், சமுதாய நலப்பகுதிகளிலும், அலுவலாளர்களுக்காக கட்டப்படும் கட்டிடங்கள் ஒரு சில அதிகாரிகளுக்குத் தான் கட்டப்படுகின்றன. மற்ற அதிகாரிகள் வாடகைக்கு வீடு இல்லாமலும், ஹோட்டல் வசதியில்லாமலும் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஜாகை வசதி செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கியிருக்கக்கூடிய தொகையிலிருந்து எத்தனை கட்டிடங்கள் கட்ட முடியுமோ, அத்தனை கட்டிடங்கள் கட்டி வருகிறோம். இவைகளைக் கட்டியிருக்கிற காரணத்தினால்தான் ஓரளவு கட்டிட நெருக்கடி தீர்ந்திருக்கிறது.

Match Factories

* 741 *Q*—Sri M. C. MUTHUKUMARASWAMY (on behalf of Sri P. G Manickam): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த இடங்களில் கவர்ன்மெண்டாராலும், தனிப்பட்டவர்களாலும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன?

(ஆ) இத்தொழிற்சாலைகளிலிருந்து எத்தனை ரூபாய்கள் மதிப்புள்ள தீப்பெட்டிகள் வருடந்தோறும் தயாரிக்கப்பட்டு வருகின்றன?

[31st October 1958

(இ) எந்தெந்த தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு அகில இந்திய கிராமக் கைத்தொழில் போர்டாரின் உதவி கிடைக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*c*) A statement [a] showing the places where match factories are run by private and by Government, the annual value of matches produced therein and the names of factories receiving assistance from the Khadi and Village Industries Commission, is placed on the table of the House.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இங்கே கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி தஞ்சை ஜில்லாவிலே தனிப்பட்டவராலோ, அரசாங்கத்திலோ ஒரு தீக்குச்சி தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படவில்லை. அங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக, அரசாங்கமாவது இந்தத் தொழிலை நடத்துவதற்கு முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தீக்குச்சித் தொழிற்சாலையை ஒவ்வொரு ஜில்லாவிலும் வைத்து நடத்தவேண்டிய தில்லை. தஞ்சை ஜில்லாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு வேறு வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : May I know why great importance is attached to these minor industries instead of large-scale industries in our State ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member might have been aware that minor industries, I mean, small-scale industries, have larger employment potential than large-scale industries.

SRI A. V. P. ASAITHAMBI : நமது ராஜ்யத் தேவையைவிட அதிகமான அளவுக்கு தீப்பெட்டி உற்பத்தி இருப்பதால், சர்க்கார் புதிதாக ஆரம்பித்திருக்கிற தொழிற்சாலைகளால், சிவகாசி, சாத்தூர் போன்ற இடங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருப்பது உண்மை தானா ? இதைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. வேலை வாய்ப்புகளை அதிகமாகக் கொடுப்பதற்காகத்தான் சிறிய சிறிய தொழில்கள் பரவலாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இங்கே போதுமான அளவு தீக்குச்சி உற்பத்தியானால், மற்ற ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதி செய்யலாம். இப்பொழுது அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிற தொழிற்சாலைகளிலிருந்து மேற்கு வங்காளம், அஸ்ஸாம் போன்ற மாகாணங்களுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

SRI R. SWAMINATHA MERKONDAR : தஞ்சை ஜில்லாவிலே பட்டுக்கோட்டையிலே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் கொடுக்கப்பட்ட புள்ளி விவரத்திலே சேர்க்கப்படவில்லை. அந்தத் தொழிற்சாலை கைவிடப்பட்டதா, அல்லது நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் பட்டுக்கோட்டையைப்பற்றிச் சொன்னபொழுது, தீக்குச்சி தொழிற்சாலையைப்பற்றித்தான் கேட்கிறார்களா என்று தெரியவில்லை. அதைப் பற்றி தகவல் இல்லை.

---

[a] Printed as Appendix IV on page 271 infra.

31st October 1958]

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : நமது ராஜ்யத்தில் நடத்தக்கூடிய தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு, மத்திய சர்க்கார் கொடுக்கும் நிதி உதவி இலவசமாகக் கொடுக்கப்படுகிறதா, அல்லது கடனாகக் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குடிசைத் தொழில் முறையில் நடத்தப்படுகிற தொழில்களுக்கு காதி வில்லேஜ் இண்டஸ்டிரீஸ் கமிஷன் கடனாகவும், மற்றும் மான்யமாகவும் உதவி தருகிறது.

SRI A. GOVINDASAMY : அரசாங்கம் நடத்துகிற இந்தத் தீக்குச்சித் தொழிற்சாலை லாபகரமாக நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடக்கிறதா ? தரம் எப்படியிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தரம் உயர்ந்த தரம் தான். ஆகவேதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதிலே நஷ்டம் ஒன்றுமில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தத் தொழில் நம்முடைய ராஜ்யத்திலே குடிசைத் தொழில் அடிப்படையில் நடக்கிறது. ஆனால் இதர மாகாணங்களிலே இத் தொழில் பாக்டரி அடிப்படையிலே நடத்துவதற்காக லைசென்சுக்காக விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. அது நமது தொழிலை பாதிக்கும் என்று சர்க்காரின் கவனத்திற்கு தகவல் வந்துள்ளதா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம்முடைய மாகாணத்திலேயும் பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளைப் புறக்கணிப்பதற்கு இல்லை. ஆனால் மத்திய ஸ்தாபனமாகிய காதி வில்லேஜ் இண்டஸ்டிரிஸ் கமிஷன் இது எவ்வளவு தூரம் சிறிய தொழிலாக இருக்கலாம், எவ்வளவு தூரம் பெரிய தொழிலாக்க அனுமதி அளிக்கலாம் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : நம்முடைய ராஜ்யத்திலே உற்பத்தியாகக்கூடிய தீப்பெட்டிகள் நம்முடைய தேசத்திலே உற்பத்தியாகிற தீப்பெட்டிகளில் முதல் தரமானது என்பது சர்க்கார்க்குத் தெரியுமா? இந்தத் தொழிலின் அபிவிருத்திக்குப் பாதகமாக இருப்பது மத்திய சர்க்காரின் வரிவிகிதம். ஆகவே சலுகை அளிக்குமாறு மத்திய சர்க்காருக்கு எழுதுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் சற்று அடக்கமாகச் சொன்னேன். கனம் அங்கத்தினர் முதல்தரம் என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ளுகிறேன். வரி விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டு தான் வருகிறது.

Planting palmyra trees along sea coasts and in forest

* 742 Q—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கடற்கரை ஓரங்களிலும் காடுகளிலும் செலவு அதிகமில்லாமலும், பயனுள்ளதுமான பனை மரங்களை உற்பத்தி செய்ய அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As regards planting of palmyra in reserved forests, 100 acres are taken up by the Forest Department annually for dibbling with palmyra seeds in the Teri Reserved Forests of Tirunelveli (South) Division, in accordance with the prescriptions of the Working Plan. As regards the sea-coast, planting of all kinds of trees including palmyra trees which would serve as wind-break in coastal areas has been recommended by the State Advisory Committee constituted under

[31st October 1958

the Emergency Relief Organization Scheme in December 1957. Suitable instructions have been given by Government to the Board of Revenue and the Chief Conservator of Forests, on this recommendation. Palmyra is also advised to be planted along with other trees in connection with the Tree Planting Campaign. Apart from these, there is no programme to plant palmyra along the sea-coast and in the reserved forests.

SRI A. VEDARATHNAM : 100 ஏக்கரா பனைமரம் சாகுபடிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அது எந்த இடத்தில் என்பதைக் கூறமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேரிக்காடு என்று இப்பொழுது சொன்னேன். அது திருச்செந்தூர் தாலுகாவில் இருக்கிறது. அது மணற்பாங்கான பிரதேசம். அங்கே ஏராளமாக பனை மரம் இருக்கிறது. மேற்கொண்டும் பனைமரம் பயிரிடுவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI M. S. SELVARAJAN : கற்பக விருக்ஷமான பனை மரங்களை புதியதாக நடுவதற்கு மான்யம் அளிப்பதுடன், இருக்கும் பனை மரங்களுக்கு ஜீவசக்தி ஊட்டுவதற்கு இன்ஜெக்ஷன் முறை போதிய அளவிலே பரீட்சை செய்து பார்க்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அந்தப் பிராந்தியத்தில் வசிக்கிறார்கள். பனை மரத்தின் அருமை அவருக்கு நன்றாகத் தெரியும். அதை பாதுகாப்பதற்கு எந்த வகையிலே கவனம் செலுத்தப்படமுடியுமோ, அவ்வாறு கவனம் செலுத்தப் பட்டுக்கொண்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal before the Government to extend the scheme to all interior villages wherever there are Government poramboke lands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, at present there is no such proposal. That would depend on the kind of land concerned.

SRI A. VEDARATHNAM : பனை மரம் சாகுபடிக்கு எந்தவிதமான செலவும் கிடையாது, விதை போடுவதைத் தவிர. அதற்கு நல்ல நிலம் வேண்டிய அவசியம்கூட இல்லை. எந்த இடத்திலும் இந்த மரம் வளரக் கூடும். ஆகவே, அதை ஏராளமாக உற்பத்தி செய்வதில் என்ன சிரமம் இருக்கிறது ? அதை விருத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பனை மரம் எங்கும் வளரும். அது மட்டுமல்ல. மனித முயற்சியின்றி, இயற்கையிலேயே அது வளர்ந்தும் வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் அறிவார்கள். இருந்தாலும், எந்த வகையில் நாம் முயற்சி எடுத்துக்கொண்டு இதை விஸ்தரிக்க முடியுமோ, அந்த வகையில் அந்தப் பிராந்தியத்திற்குத் தகுந்தவாறு கவனம் செலுத்தப்படுகிறது.

SRI N. MARUDACHALAM : பனை மரத்தைவிட தென்னை மரம் ரொம்பவும் விசேஷமானது. தென்னை மரத்தை வளர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பனை மரத்தையும், தென்னை மரத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இல்லை. தென்னை மரம் வளர்ப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

SRI R. KRISHNASAMI NAIDU : கண்மாய் கரைகளிலே பனை மரங்களை நெருக்கமாக நடுவதினால் அந்தக் கரைகளிலுள்ள மண் சீக்கிரமாக கரைவது இல்லை. கரைகள் பலப்படுகின்றன. ஆகை

31st October 1958]

யினாலே, சர்க்கார் எல்லா கண்மாய் கரைகளிலும் பனை மரங்களை ஊன்று வதற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கண்மாய் கரை களில் பனை மரங்களை வைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை. எதெது தகுதினயானதோ, அதைச் செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத் திக்கொண்டுவருகிறது.

Schools for Yandal and Perumalpet villages

*743 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) போளூர் தாலுகா, எந்தல், பெருமாள்பேட்டை கிராமங்க ளுக்குப் பள்ளி தேவையென்று மகஜர் வந்ததா ?

(ஆ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A petition was received by the Divisional Inspector of Schools, Coimbatore.

(*b*) The petition was rejected by the Divisional Inspector.

SRI S. M. ANNAMALAI : நான் இரண்டு கிராமங்களைப்பற்றி கேள்வி கேட்டிருக்கிறேன். இரண்டு கிராமங்களைப்பற்றியும் தனித்தனியாக பதில் சொல்லவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

Mallattaru channel

*744 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to Question No. 285, answered on 11th March 1958—

(*a*) whether the scheme for remodelling of the 'Mallattaru' channel in Lalgudi taluk, Tiruchirappalli district, has been got ready;

(*b*) the details of the scheme; and

(*c*) when the same will be implemented?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Detailed investigation is to be done for remodelling the channel and the details will be known only on completion of the investigation. Necessary proposals have been called for and they are awaited.

SRI S. LAZAR : இந்த வாய்க்காலின் பாசனத்தினால் ஆயிரக் கணக்கான ஏகர்கள் பலன் அடைகின்றன. "ரெகுலர் இர்ரிகேஷன் சேனல்" ஏற்படுத்தினால் உணவு உற்பத்திக்கு உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் இதைத் துரிதப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் பதிலில் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். சீப் என்ஜினியர் அவர்கள் ஜில்லா சூபரின்டென் டிங் என்ஜினியரிடம் வெகு சீக்கிரம் ஸ்பெஷல் ஸ்டாப் நியமிப்பதற்கு "பிரபோஸல்ஸ்" அனுப்பும்படி கேட்டிருக்கிறார்கள். அதனால் வேலை துரிதமாக நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

[31st October 1958

Handloom cess fund

* 745 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1957–58-க்கு கைத்தறி செஸ் நிதியின் மூலம் சர்க்காருக்கு கிடைத்த பணம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : Rs. 125·82 lakhs, of which grants amounted to Rs. 92·09 lakhs and loans amounted to Rs. 33·73 lakhs.

SRI V. K. KOTHANDARAMAN : 1957–58-ஆவது ஆண்டிலே கிடைத்த செஸ் நிதி அவ்வளவையும் கைத்தறிக்காரர்களுக்கு உபயோகப்படுத்தாதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : செஸ் நிதி யானது சொஸைடிகளுக்கு காலாகாலத்தில் கிடைக்காததன் காரணமாக, அது காலாகாலத்தில் கிடைத்தால் நெசவாளர்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பதை முன்னிட்டு, அதை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : I will look into it.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : செஸ் நிதி கிடைப்பதற்கு காலதாமதம் ஆவதால், கூட்டுறவு சங்கங்களை நடத்துவதற்கு முடியாத நிலைமையில் இருக்கின்றன. எனவே, சர்க்கார் செஸ் நிதி கிடைப்பதற்கு முன்பாக கடன் கொடுத்து, அது வந்ததும் கடன் பணத்தை திருப்பி எடுத்துக்கொள்ளும் வகையில் ஏதாவது உதவி செய்ய முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : திருநெல்வேலி, ராமனாதபுரம் மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு நிலையங்களுக்கு 7, 8 லட்சம் ரூபாய் அள வுக்கு தள்ளுபடித் தொகை ஓராண்டு காலத்திற்கு கிடைக்காமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அவர்களுடைய விண்ணப்பங்கள் கவனிக்கப்பட்டதா ?

MR. SPEAKER : This does not arise from the main question. The hon. Member must put a separate question.

SRI A. MARIAPPAN : 1958–59-ல் ஒதுக்கிய தொகையில் 1958 எப்ரல் மாதம் வரையில் தான் ரிபேட் தொகை கொடுக்கப்பட்டிருப் பது சர்க்காருக்குத் தெரியுமா ? மேற்கொண்டு நடப்பு மாதங்களுக்கு உடனடியாக பணம் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி வேண்டும்.

Art Silk

* 746 *Q.*—SRI S. LAZAR : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் ஒரு வருடத்திற்கு நெசவாளர்களுக்குத் தேவை யான நார் பட்டு எவ்வளவு ?

(ஆ) நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகும் நார் பட்டு எவ்வளவு ?

31st October 1958]

(இ) 1958–59-க்கு தேவையான நார் பட்டு கிடைக்கிறதா ?

(ஈ) இல்லையானால், அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) About 5 million pounds.

(*b*) Art silk yarn is not produced in our State.

(*c*) No, Sir.

(*d*) The Government of India and the Joint Controller of Imports and Exports were requested to issue licence to the Madras State Handloom Weavers' Co-operative Society for the import of Rs. 10 lakhs worth of art silk yarn for distribution to the handloom industry in this State. An import licence for Rs. 8 lakhs worth of yarn has been issued. Arrangements are also under examination to secure an allotment of indigenous art silk yarn from the Textile Commissioner for distribution to the handloom weavers in this State.

SRI S. LAZAR : இந்த நாலை நமது நாட்டில் உற்பத்தி செய்வதற்கான முயற்சி ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ? இதை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை அமைப்பதானால் எவ்வளவு செலவு ஆகும் ?

THE HON. SRI V. RAMAIAH : தனியாக கேள்வி போடவேண்டும்?

SRI A. VEDARATHNAM : இந்த நார்பட்டு எந்த நாடுகளிலிருந்து எவ்வளவு இங்கே இறக்குமதி செய்யப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : தனியாக கேள்வி வேண்டும்.

Financial assistance to the Tirunelveli District Board

* 747 *Q.*—SRI T. VELUCHAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have any proposal to help the Tirunelveli District Board by giving financial assistance?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Government have recently sanctioned an advance d.a. grant of Rupees 2,00,000 for 1958–59. The Special Officer has been asked to apply to Government, if necessary, for a repayable advance to meet current expenditure.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் 25–10–57-ல் கூடிய ஜில்லா அட்வைஸரி கமிட்டியில் ஜில்லா போர்டு கண்டிராக்டர்களுக்கு 28 லட்ச ரூபாய் பாக்கி கொடுக்கவேண்டியிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் அரசாங்கம் ஜில்லா போர்டுக்கு கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையை துரிதமாகக் கொடுக்க முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா ஜில்லா போர்டுகளின் நிதி நிலைமை மோசமாக இருக்கிறது. இதுபற்றி எல்லா ஜில்லா போர்டுகள் ஸ்பெஷல் அதிகாரிகளேயும் கூப்பிட்டு பரிசீலனை செய்து இப்பொழுது ஜில்லா போர்டுகளின் நிதி நிலைமையை எப்படி சரிக்கட்டுவது என்பதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், இந்த நெருக்கடி சீக்கிரம் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI T. K. SUBBIAH : திருநெல்வேலி ஜில்லா போர்டில் நடப்பு வருஷத்தில் கிராமாந்திர ரோடுகள், ஆஸ்பத்திரிகள் இவைகளை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. அதுமட்டுமல்ல,

எல்லா ஜில்லா போர்டுகளையும் விட, குறிப்பாக திருநெல்வேலி ஜில்லா போர்டில் பி.டி. எல்.டி. ஆசிரியர்களுக்கு சம்பளத்தைக் குறைக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலையிலே அவர்களுக்கு நிறைய உதவித் தொகை அளிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : **The hon. member is making a request.** This does not arise out of the main question.

Godowns for foodgrains

* 748 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் எத்தனை இடங்களில் தானிய கிடங்குகள் கட்ட அரசாங்கம் உத்தேசித்துள்ளது ?

(ஆ) எங்கெங்கே ?

(இ) அதற்காக ஒதுக்கியுள்ளத் தொகை எவ்வளவு ?

(ஈ) எப்போது அவைகள் முடிவுபெறும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government propose to construct godowns for storing food-grains at six centres in Tanjore district.

(*b*) The six centres are :—

Tiruthuraipoondi,
Tiruvarur,
Maruthuvakudi village (Aduthurai),
Papanasam,
Kuttalam, and
Pattukottai.

(*c*) The cost of one godown is estimated at Rs. 75,000 approximately. An aggregate expenditure of Rs. 15.75 lakhs being the cost of 21 godowns including the six at Tanjore district is to be met from the Food Bonus Fund allotted by the Government of India amounting to Rs. 16 lakhs which is the share of the present Madras State.

(*d*) The programme for 21 godowns has already been sent to the Government of India for approval and it can be implemented only after the Government of India's approval is received.

SRI K. B. S. MANI : இந்த கோடவுன்கள் கட்டி முடிந்த பிறகு அவைகளை அரசாங்கமே உபயோகப்படுத்துமா அல்லது அவைகள் பொது மக்களுக்கு வாடகைக்கு விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் அவைகளை உபயோகப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் தான் கட்டப்படுகின்றன. ஆனால் அவைகள் பொது நலத்துக்கும் உபயோகப்படுத்தப் படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What is the capacity of each godown?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

31st October 1958]

Issue of licences under the Madras Cinemas (Regulation) Act

* 749 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of applications pending before the licensing authority (District Collector), Tiruchirappalli, as on 1st June 1958, for the issue of 'B' or 'C' licences under the Madras Cinemas (Regulation) Act;

(*b*) the number of applications kept pending longer than the period prescribed under the rules;

(*c*) the remedies to the applicants in such cases; and

(*d*) the steps taken by the Government to avoid such delays?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Forty-two applications for 'No objection certificates' were pending with the District Collector, Tiruchirappalli, on 1st June 1958. No application for form 'C' licence was pending with the Collector on that date.

(*b*) Twenty-seven applications for 'No objection certificates' were pending with the licensing authority longer than the period prescribed under the rules, out of which the Collector has since disposed of 25 applications.

(*c*) The applicants should represent to the concerned licensing authorities to expedite the matter.

(*d*) Necessary instructions have been issued to all the licensing authorities to avoid delays in the issue of 'No objection certificates' to cinemas in future.

SRI S. LAZAR: இப்படிப்பட்ட சர்ட்டிபிகேட்டுகள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய தொகை கிடைக்காமல் போகிறது. ஆகவே இதைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தவிர்க்கக்கூடிய காலதாமதம் ஏற்படக்கூடாது என்று கலெக்டருக்கு இந்த அரசாங்கம் தகவல் கொடுத்து வற்புறுத்தியிருக்கிறது.

Katta Bomman

* 750 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri P. G. Manickam): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கட்டபொம்மன் வம்சத்தில் பிறந்த குடும்பத்தார்கள் எந்தெந்த இடங்களிலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ?

(ஆ) இக்குடும்பத்தார்களுடைய வாழ்க்கைக்கான பென்ஷன் தொகையானது எந்த வருஷத்திலிருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) There are five surviving members of the family of Katta Bomman. Four of them are residing at Athanoor village and one at Kalluranal village, Koilpatti taluk;

(*b*) No member of the family is being paid any pension now.

[31st October 1958

SRI M. S. SELVARAJAN : கட்டபொம்மன் சந்ததியார்கள் பழங் காலத்திய பெருமைப்படக்கூடிய மக்கள். அவர்களில் சிலர் இப்பொழுது ஜீவிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். தங்களுடைய ஜீவனோ பாயத்திற்குக்கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர் களுடைய ஜீவனோபாயத்திற்கு வேண்டிய அளவாவது நிலபுலன்கள் அல்லது மொத்த மான்யம் அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் தங்களு டைய காலத்தை மரியாதயாகக் கழிக்கக் எதாவது வழி செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்போல் ஜீவனோபாயத் திற்கு வழி இல்லாதவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரு டைய ஜீவனோபாயத்திற்கு வழி செய்வதற்காகத்தான் திட்டம் போட்டு வேலை செய்து வருகிறோம்.

SRI S. NAGARAJA MONIGAR : அவர் தமிழரா அல்லது தெலுங் கரா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வி இதில் எழவில்லை. What does it matter who he is ?

SRI K. SATTANATHA KARAYALAR : கட்டபொம்மன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஊமைத்துரை குடும்பத்தாரும். கட்டபொம்மனைத் தூக்கி லிட்ட பாஞ்சாலங்குறிச்சி என்ற இடத்தில் தங்கியிருந்துவந்ததால் இந்த இடத்தை நல்ல முறையில் வைத்திருக்கவும் தங்கியிருக்கவும் வசதியாகும் என்ற அடிப்படையில் கட்டபொம்மன் குடும்பத்திற்கு வசதி செய்து கொடுப்பார்களா ? இது விஷயமாக கட்டபொம்மன் ஞாபகார்த் தக் கமிட்டியின் வேண்டுகோள் எதாவது சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தங்கலாம். அதற்கு எந்த விதமான ஆட்சேபணையும் கிடையாது.

MR. SPEAKER : He is making a suggestion.

SRI P. S. CHINNADURAI : கட்டபொம்மன் நாடகம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதைக் கண்டு மக்கள் பெரும்பாலும் பார்த்து போற்றுவதாலும், அதைப் பிரபலமாக பார்த்து வருவதாலும் அதிகமாக வருவாய் வருகிறது. அப்படி அதிகப்படியான வருவாய் ஒவ் வொரு நாடகத்திலும் கிடைக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் அந்த வசூலிலிருந்து ஒரு பகுதியை கட்டபொம்மன் குடும்பத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய ஒரு சட்டம் இயற்ற சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சோஷலிஸ கருத்தை அடிப் படையாகக் கொண்டவர்கள் இப்படிப்பட்ட [பரம்பரை பாத்தியதையை வற்புறுத்துவது ஆச்சரியமாக இருக்கிறது.

SRI A. GOVINDASAMY : On a point of order. கனம் சின்ன துரை கேட்ட கேள்வி இதில் எப்படி எழுகிறது ?

MR. SPEAKER : I rule it is relevant.

Bridge across Coleroon

/ *751 *Q.*—SRI T. K. SUBBAIAH : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி ஜில்லா திருமானூருக்கும், தஞ்சாவூர் ஜில்லா விளாங்குடிக்கும் மத்தியில் கொள்ளிட நதியில் குறுக்கே பாலம் கட்ட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானால், எத்தகைய பாலம் கட்ட உத்தேசம் ?

31st October 1958]

(இ) பாலத்தின் மதிப்பீடு என்ன ?

(ஈ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென ஒதுக்கப் பட்டத் தொகை எவ்வளவு ?

(உ) இதுவரை வேலை துவக்காத காரணம் என்ன ?

(ஊ) எப்பொழுது வேலை துவக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) A causeway.

(*c*) Rs. 37·5 lakhs for a bridge; but the causeway now proposed will cost Rs. 14 lakhs only.

(*d*) The work of constructing a bridge at the site has been included in the Second Five-Year Plan with a provision of Rs. 30 lakhs.

(*e*) & (*f*) The Government of India, who were addressed for taking up the work with grant from Central Road Fund Reserve have not agreed to give a grant for this work. Therefore the work can be taken up only in its due turn, subject to the availability of funds.

Separation of Audit from the Administration in the Co-operative Department

* 752 *Q.*—SRI M. P. SARATHI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு இலாகாவில் நிர்வாகமும் தணிக்கையும் தனியாகப் பிரிக்கப்பட்டு செயலாற்றப்படுகிறதா ?

(ஆ) எல்லாவகைச் சங்கங்களும் தணிக்கை செய்யப்படுவது தணிக்கைப் பிரிவினுல் மட்டுமேதானு ?

(இ) இல்லையென்ருல், அது எப்பொழுது சாத்தியமாகும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government recently decided that audit should be separated from administration in the Co-operative Department. They have appointed a Chief Audit Officer as the head of the Audit Branch and have sanctioned necessary staff at headquarters and at district level for attending to audit work exclusively. Preliminaries like the selection of officers, location of offices, separation of staff, etc., are being attended to.

(*b*) & (*c*) The audit of the following types of co-operative societies which are under the administrative control of the Registrar of Co-operative Societies will be undertaken by the Audit Branch of the Co-operative Department.

(1) Co-operative Societies under the administrative control of the Co-operative Department;

(2) Fisherman Co-operative Societies under the administrative control of the Fisheries Department; and

(3) Kallar Co-operatives in the Madurai district under the control of the Harijan Welfare Department.

The question of extending the control of Chief Audit Officer over the audit of industrial co-operative societies, workshop and jaggery manufacturing co-operative societies, which are in charge of the Director of Industries and Commerce, is under the consideration of the Government.

SRI M. P. SARATHI : தணிக்கையின் மூலமாக இந்த அரசாங்கம் வசூல் செய்யும் ஆடிட் பீஸ் எவ்வளவு என்று சுமாராகச் சொல்லமுடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : May I know whether this audit will be under the control of the Registrar of Co-operative Societies, and if not, is there any proposal to transfer it to the Examiner of Local Fund Accounts?

THE HON. SRI V. RAMAIAH : It is under the over-all control of the Registrar of Co-operative Societies.

SRI M. K. MARIAPPAN : தணிக்கை செய்வதற்கு போதிய அதிகாரிகள் இல்லாத காரணத்தால் தணிக்கை செய்வதில் தாமதம் ஏற்படுகிறது என்பதை சர்க்கார் அறியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : அதற்கு வேண்டிய அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமனம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

Public Prosecutor, Tiruchirappalli

* 753 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government are aware that the Public Prosecutor, Tiruchirappalli, was attacked by some miscreant on 26th January 1958, causing serious injuries and resulting in permanent loss of earning capacity;

(b) the cause of this attack;

(c) whether the Public Prosecutor has applied to the Government for adequate compensation; and

(d) what is the action taken by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) On 27th January 1958, the Government received information that on the night of 26th January 1958 two persons had attacked the Public Prosecutor, Tiruchirappalli, and that he had sustained some injuries. The Government understand that the Public Prosecutor has not suffered any loss in his earning capacity on account of the injuries.

(b) During the trial of the two persons in question who were either members of the Dravida Kazhagam or its sympathisers, it was canvassed by the prosecution that the motive of the accused in committing the offence was that the Public Prosecutor had conducted the prosecution of a case against Sri E. V. Ramaswamy Naicker for an offence punishable under section 117, I.P.C., which

31st October 1958]

ended in his conviction and imprisonment for six months. The Assistant Sessions Judge, Tiruchirappalli, who tried the case did not accept this contention.

(c) Yes, Sir.

(d) The request is under the consideration of the Government.

SRI A. V. P. ASAITHAMBI : பப்ளிக் பிராசிகூட்டர் விண்ணப் பித்துக்கொண்ட மனுவின் பேரில் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பது போன்று வெள்ளேயரை எதிர்த்து அதனுல் பாதிக்கப்பட்ட பரம்பரை குடும் பங்களுக்கு கஷ்டத்தைப்போக்க ஏதாவது நஷ்ட ஈடு கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் யோசனே செய்யுமா ?

MR. SPEAKER : எந்தக் குடும்பம் ?

SRI A. V. P. ASAITHAMBI : கட்டபொம்மன் குடும்பம்.

MR. SPEAKER : அந்தக் கேள்வி இதில் வராது. The question is out of order.

SRI S. LAZAR : இந்தக் கேள்வியில் காம்பன்சேஷனைப்பற்றி குறிப் பிடப்பட்டிருக்கிறது. அந்த பப்ளிக் ப்ராசிகூட்டருக்கு முக வடிவு மாறு பட்டிருக்கிறது. அதனுல் அவருக்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி ரண சிகிச்சை கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர் அரசாங்கத்திற்கு ஒரு மனுகொடுத்திருக்கிறுர். அந்த மனு இப்பொழுது பரிசீலனே செய்யப் பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : Since the accused have been acquitted in this case, is there any proposal to investigate the case further?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not see how a case could be investigated after the Sessions Court has acquitted the accused. But the question of appeal is under examination by Law officers.

Selection Committee for the Teachers' Training Schools

* 754 Q.—SRI P. U. SHANMUGAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு வட ஆற்காடு மாவட்ட ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக் கான தேர்வுக் குழுவில் பணியாற்றிய அங்கத்தினர்கள் பெயர்கள் யாது ?

(ஆ) இவர்களே நியமிக்கும் பொறுப்பு யாருடையது ?

(இ) எந்த யோக்யதாம்ச அடிப்படையில் இவர்கள் நியமிக்கப்படுகிறுர் கள் ?

(ஈ) ஒரே அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களேயே இதில் நியமித்திருப் பதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) *Officials* :

(1) The District Educational Officer.

(2) The Heads of the Institution concerned.

Non-Officials :

(1) Sri P. Ramachandran, M.L.A.

(2) Sri T. Manavalan, Gudiyatham.

(3) Sri P. S. Tirugnanasambanda Mudaliar.

[31st October 1958

(*b*) Government nominate the non-official members of the Committee on the recommendation of the Director of Public Instruction.

(*c*) Persons interested in Basic Education are selected and nominated.

(*d*) The political leaning of the persons concerned is not the criterion for selecting members.

Sri P. U. SHANMUGAM: இதற்கு அரசியல் காரணங்களைக்கொண்டு உறுப்பினர்களை நியமிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களை நியமித்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இதிலே அங்கத்தினர்களை நியமிக்கும்போது, அவர்கள் ஆதாரக் கல்வியிலே நம்பிக்கை உடையவர்களாகவும், அதிலே அக்கறை எடுத்துக்கொள்பவர்களாகவும் இருக்கவேண்டும். வட ஆற்காடு மாவட்டத்தில் ஆதாரக் கல்வி சம்பந்தமாக இக்குழுவில் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டதினால் ஒரு சமயம் டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் இவர்களைச் சிபார்சு செய்திருக்கலாம்.

Sri T. KARIA GOUNDER: அதிலே நியமிக்கப்பட்ட மெம்பர்களில் ஒருவராகிய ஸ்ரீ பி. எஸ். திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது எனக்குத் தெரியாது.

Sri K. ANBAZHAGAN: இப்படிப்பட்ட கல்வித் துறையில், பொதுவாக அந்தந்த மாவட்டத்திலேயுள்ள, அந்தந்த வட்டாரத்திலேயுள்ள எம்.எல்.ஏ.க்களை இடம் பெறுமாறு செய்வதில் அரசாங்கம் அக்கறை காட்டக் கூடாதா ? அவர்கள் போதுமான அளவு பொதுமக்கள் பிரதிநிதிகளாக அந்தக் குழுவில் இடம் பெறச்செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இரண்டு எம்.எல்.ஏ.க்களை அக் குழுவில் அங்கத்தினர்களாகப் போட்டிருக்கிறோம்.

Sri P. U. SHANMUGAM: ஆதாரக் கல்வியில் நம்பிக்கை உடையவர்களாகப் பார்த்து அதில் உறுப்பினர்களாகப் போட்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், அந்த மாவட்டத்தில், அக்குழுவில் இடம் பெறாத மற்றவர்கள் ஆதாரக் கல்வியில் நம்பிக்கையற்றவர்கள் என்பது சர்க்காருடைய தீர்ப்பா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி அவர்கள் கூட தமக்கு ஆதாரக் கல்வியில் பற்று இருக்கிறது, அக்கறை இருக்கிறது என்று சொன்னார்கள். அவரைக்கூட கமிட்டியில் போட்டிருந்தோம்.

Sri A. GOVINDASAMY: ஜில்லா கல்வி அதிகாரி என்னுடைய பெயரை சிபார்சு செய்திருந்தார். டிவிஷனல் இன்ஸ்பெக்டரும் சிபார்சு செய்திருந்தார். டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனும் என்னுடைய சம்மதத்தைப் பெற்றிருந்தார். ஆனால், இடையிலே ஏற்பட்ட தகராறைத் தான் நான் கல்வி அமைச்சரிடம் சொல்லியிருந்தேன். ஆகவே, கல்வி அமைச்சர் அவர்கள் நான் அவரிடம் சொல்லாததை நான் சொன்னதாகத் தவறுதலாகச் சொல்லி இங்கே பரிகாரம் தேடவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

31st October 1958]

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் என்னிடம் வந்து, அவருக்கு ஆதாரக் கல்வியில் நம்பிக்கையும் அக்கறையும் இருப்பதைப்பற்றிச் சொன்னதை இங்கே சொன்னேன். "எனக்கும் ஆதாரக் கல்வியில் நம்பிக்கை இருக்கிறது ; ஆகையால், என்னுடைய பெயரையும் போடவேண்டும்" என்று அவர் சொன்னார். அதற்குப் பிற்பாடுதான் அவரை அந்தக் கமிட்டியில் போட்டேன்.

Radio sets in private buses

* 755 *Q.*—Sri K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have banned the installation of radio sets (broadcasting-receiving sets) in the buses operated by private agencies; and

(*b*) if so, the reasons for the same?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The ban has been imposed to prevent accidents, as the music from the radio sets installed therein diverts the attention of the drivers, from driving, thereby giving room for accidents.

Sri K. VINAYAKAM : Sir, will the Government consider the possibility of fixing opaque, sound-proof material just between the driver and the passengers so that the noise of the music will not deter the attentive driving of the drivers? This is necessary because the uneasiness caused by travel in crowded buses where passengers are packed like Sardines, will be relieved by this to a greater extent.

The Hon. Sri V. RAMAIAH : The noise of the music will add to the aggravation of the diversion and therefore I do not accept it on principle.

Caste Abolition Campaign

* 756 *Q.*—Sri M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திராவிட கழகத்தினர் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டத்தில் சிறை சென்று சிறையிலேயே உயிர் நீத்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) நோயின் காரணமாக தண்டனைக் காலம் முடியும் முன் விடுதலை செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ?

(இ) சிறையில் நோய்வாய்ப்படக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) One.

(*b*) Sixty-four.

(*c*) The reasons for their falling ill were their poor health even on admission into the Jail and the sudden change in their diet after admission.

[31st October 1958

SRI M. P. SARATHI : சிறையில் இறப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் சிறை அதிகாரிகளும் டாக்டர்களுக்குந்தானே என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறையில் இருக்கிறவர்களைப் பொறுத்தமட்டில், அங்கேயுள்ள வைத்தியர்கள் வேண்டிய கவனம் செலுத்தித்தான் வருகிறார்கள். சிறையில் இறந்ததற்கு அவர்கள் ஒருக்காலும் காரணம் அல்ல.

Madras Catering Establishments Act, 1958

* 757 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the cause for the delay in publishing the Rules made under the Madras Catering Establishments Act, 1958 (Madras Act XIII of 1958);

(*b*) whether the Act has come into force in all parts of the State; and

(*c*) if so, from when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The drafting of the Rules was taken up immediately the Act was passed by the Legislature. The Draft is being finalised and will be published for eliciting public opinion shortly. There has been no avoidable delay in the matter.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

MR. SPEAKER : I have got only five minutes more and there are at least ten more questions.

Appointment of High Court Judges

*758 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹைகோர்ட் நீதிபதிகளாக தேர்ந்தெடுக்க யார் யாருடைய பெயர்களை மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யப்பட்டது? அல்லது எழுதப்பட்டது ?

(ஆ) அப்படி சிபாரிசு செய்துள்ளவர்களின் யோக்கியதாம்சங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I decline to answer the question on the ground that it would be against the public interest.

Bentonite

MR. SPEAKER : The hon. Member, Sri V. Sankaran, is absent. The question and the answer will be printed in the official proceedings.

* 759 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the properties and uses of Bentonite;

(*b*) its present market price;

31st October 1958]

(c) how far it would be useful and how much of it could be used with advantage in the small, heavy and cottage industries in the State;

(d) an estimate of the return that this State may get annually from the said quarry of Bentonite; and

(e) Whether the Government propose to acquire and work the quarry or mine by themselves?

THE HON. SRI V. RAMAIAH: (a) to (e) The answer[a] is printed and placed on the table of the House.

Bhagyalakshmi Mills

* 760 Q.—SRI P. S. CHINNADURAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the reasons for the closure of the Bhagyalakshmi Mills at Pollachi;

(b) the steps taken by Government to re-open the Mills; and

(c) the help, if any, given to the workers as a result of the above closure?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (c) The attention of the hon. Member is invited to the answer given by Minister for Industries on 11th February 1958 in reply to starred question No. 48 asked by the hon. Member Sri N. K. Palanisami on behalf of the hon. Member.

(b) No steps could be taken to re-open the mills because the Government can neither compel the management to re-open the mills nor can they take over such mills.

SRI P. S. CHINNADURAI: நாட்டில் உற்பத்தியைப் பெருக்குகிற முறையிலே பயன்படக்கூடிய ஆலையை முதலாளிகள் அனாதைக் குழந்தைகளைப்போல் விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். அதை அரசாங்கம் ஏன் எடுத்து நடத்துவதற்கு முன்வரக்கூடாது? அரசாங்கம் நேரடியாக எடுத்து நடத்த முன்வராவிட்டாலும், அதற்கு உரிய வேறு நபர்களைத் தெரிந்தெடுத்தாவது அவர்களுக்கு உதவிசெய்து அதன் மூலம் ஆலைகளை நடத்துவதற்கு ஏன் முன்வரக் கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பல காரணங்களால் வெற்றிகரமாக நடத்தப்பட முடியாத மில்களையெல்லாம் அரசாங்கம் ஏற்று நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், எந்தத் தனி நபர்கள் அல்லது கம்பெனியார் வந்தாலும் அரசாங்கம் வேண்டிய ஆதரவை அளிக்கும். தாங்களே நடத்தக் கூடுமா என்பதை அவ்வப்போது அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். இந்த மில்லைப் பொறுத்த வரையில், இது திறக்கப்பட்டு வேறு ஒரு தொழிலாக இது மாற்றப்பட இருக்கிறது. அது நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

[a] Printed as Appendix V on pages 272–273 infra.

[31st October 1958

House-rent allowance to the clerks of the Special Branch of the Police Department

* **760-A Q—Sri A. VEDARATHNAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரிலுள்ள ஸி.ஐ.டி. இலாகாவைச் சேர்ந்த விசேஷ போலிஸ் பிராஞ்சில் வேலை செய்யும் குமாஸ்தாக்களுக்கு எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் வீட்டுவாடகைப் படி கொடுக்கப்படுகிறது ?

(ஆ) மேற்படி விசேஷ போலீஸ் பிராஞ்சில் வேலை செய்கிற எந்த குமாஸ்தாக்களுக்காவது இந்த வீட்டு வாடகைப் படி மறுக்கப்படுகிறதா ?

(இ) அப்படியானால், எத்தனை பேர்களுக்கு மறுக்கப்படுகிறது ? அதற்கான காரணங்கள் யாவை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Special Branch Clerks have to live near the office so as to be within easy reach, as they are liable to be called out any hour to attend to urgent work. As far as possible, the clerks are provided with quarters (taken on long lease) for which rent is paid by the Government. Those who occupy houses secured by their own efforts are sanctioned the actual rent not exceeding Rs. 50 per mensem which is the maximum admissible to Special Branch Clerks under the orders in force.

(b) Yes.

(c) Three. These three clerks are residing in houses owned by their parents and are not entitled to house-rent allowance in lieu of free quarters.

Sri A. VEDARATHNAM : வீட்டு வாடகை அலவன்ஸ் பெறுதவர் களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்திருக்கிறதா ? அந்த விண்ணப்பங்களை அரசாங்கம் அனுதாபத்துடன் கவனிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Dairy Farm

* **760-B** *Q.*—**Sri P. G. MANICKAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—1951-56, 1956-58-ல் ஐந்து ஆண்டு திட்டங்களின் கீழ் சென்னை ராஜ்யத்திலே எந்தெந்த இடங்களிலே மத்திய சர்க்கார் உதவியோடு பால் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No Dairy Farm was started with financial assistance from the Government of India in this State under the control of Animal Husbandry or Co-operative Department under the Five-Year Plans during the periods 1955–56 and 1956–58.

Fire accidents

* 760-C *Q.*—Sri A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of fire accidents in July, 1958 at Tindivanam, South Arcot district;

(*b*) whether there was any fire accident on 6th August 1958; and

31st October 1958]

(c) whether the Government have any proposal to open a fire service station at Tindivanam?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There were three accidents in the month, namely, on the 16th, 20th and the 23rd July 1958.

(b) Yes, Sir.

(c) The Inspector-General of Police, Fire Service Branch, has since submitted proposals for the opening of fire stations in four places including Tindivanam for consideration as Part II Scheme for 1959–60. The proposals are under consideration.

SRI A. GOVINDASAMY : நகரசபைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் தீயணைக்கும் நிலையங்கள் ஏற்பட்டு வருகின்றன. திண்டிவனத்தில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டு வருவதன் காரணமாக, அங்கே வருகிற வெய்யில் காலத்திற்குள்ளாக, தீயணைக்கும் நிலையமொன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதியளிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சற்றுமுன் நான் கடைசியாகச் சொன்ன பதிலிலிருந்து இந்தக் கேள்விக்கு இடம் இல்லை. முதலில் திறக்கப்பட இருக்கும் நான்கு நிலையங்களிலே ! திண்டிவனமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

Medical Colleges

* 760-D Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact, that students who passed intermediate examination has been prohibited from applying to the First M.B.B.S. course this year; and

(b) if so, what is the reason for such total prohibition?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

SRI K. VINAYAKAM : Sir, if no ban was placed on the applications received from the intermediate candidates to the M.B.B.S. course how many applications were received and out of them how many students were selected for the Medical Course?

THE HON. SRI M. A. MANICKAVELU : There were 398 eligible applicants out of which five were selected.

*760-E. Q.—SRI M. P. SARATHI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு அரசாங்க வைத்தியக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்புக்கு எத்தனை இண்டர்மிடியட் தேர்ச்சி பெற்றவர்கள் சேர்க்கப்பட்டனர் ?

(ஆ) அவர்கள் எந்த ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Ten.

(b)

South Arcot	... ...	1
North Arcot	... ...	2
Salem	... ...	1
Madurai	... ...	1
Mysore State	... ...	5

[31st October 1958

Sri K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the Dean of the College in the early stages refused to entertain any applications to the M.B.B.S. Course from the Intermediate candidates and later on without publication in the newspapers and without giving any notice to the students, some applications were received in an indirect way?

The Hon. Sri M. A. MANICKAVELU : No ' indirect ' way; everything was direct way only. The thing happened this way, that is, under the Pre-Professional Course, direct admission to M.B.B.S. course was stopped; but there arose ten vacancies for regular admission of which five seats had to be earmarked for Mysore State and so the remaining seats were filled up in this manner after examining the 398 applications received.

Mr. SPEAKER : It is now 10 o'clock. I shall take up three more minutes and finish the rest of the questions.

Employment Exchange

* 760-F *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ் போர்டில் வேலையில்லாதவர்களின் பெயரை பதிவு செய்து, பிறகு 3 மாதத்திற்கு ஒரு முறை மறுபடியும் பதிவு செய்யும்படியான விதி எதற்காக உள்ளது ?

(ஆ) ஒரு வேலைக்கு ஆள் வேண்டுமென்றால் எதற்காக 10 பேர்களை அனுப்புகிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Registration is required to be renewed once in two months. This process enables the Employment offices to keep up-to-date the registers of only such applicants who really need employment assistance through employment offices.

(*b*) Employment Exchanges are not competent to make final selection of candidates for appointment. A batch of applicants generally ranging from 3 to 7 times the number of vacancies is therefore sent to the appointing authorities in order that they may have a wide scope for selecting the most suitable candidate among those sent to them.

Sri V. K. KOTHANDARAMAN : ஒரு முறை பதிவு செய்துகொண்டு விட்டாலும் அப்புறம் இரண்டு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை சென்று அதைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்கிற முறை இருப்பதனால் அநேகம் பேர் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே முதன் முறையாகச் சென்று பதிவு செய்துகொண்டு விட்டாலே போதும் என்று வைத்துக்கொள்ள எற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வேலை வேண்டும் என்கிறவர்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சென்று புதுப்பித்துக்கொள்வது முடியாது என்றால் அவர்களுக்கு வேலையில் அக்கறை இல்லை என்று தான் அர்த்தம். பதிவு செய்து கொண்ட பிறகு அவர்களுக்கு ஒருக்கால் இடையில் வேலை கிடைத்திருக்கலாம். அவர்களுக்கு வரும்படி உத்திரவு போட்டு தங்களுக்கு வேலை கிடைத்து விட்டதை பல நாள் கழித்து அறிவித்தால் இன்னொருவருக்கு வேலை போடுவதற்குள் கால தாமதம் ஆகிவிடும். ஆகவே இரண்டு மாதத்திற்கு ஒரு முறை புதுப்பித்துக்கொள்ள வேண்டுமென்று இருப்பதுதான் சரி.

31st October 1958]

Salem Bauxite Ore

* 760-G *Q*.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any reports from U.S.A. on the examination of the samples of Bauxite ore of Salem; and

(*b*) what are the prospects of setting up an Aluminium Plant at Mettur Dam in the Public Sector?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In 1956, at the instance of the Government of India, two American Experts M/s. Blackwelder and Huchison inspected the Mettur Dam and the Bauxite bearing area of the Shevaroys. They desired that representative samples of the Salem bauxite should be extracted and sent to America for tests. The Central Government accordingly entrusted this work to the Geological Survey of India. This Government were under the impression that the samples had been sent to America for tests. But it was learnt subsequently that the samples had not been sent as those extracted by the Geological Survey of India were found on analysis at the C.T.A. Laboratory, Madras to be too low in alumina content due to faulty methods of sampling. But this question is no longer important as this Government have since requested M/s. Westecataini of Italy to send two experts to this State to study the project and to give us a report.

(*c*) There are no prospects of setting up this plant in the public sector. We expect, if all goes well it will be set up in the privaet sector.

Pest attack on Cotton

760-H *Q*.— SRI R. KRISHNASAMI NAIDU : கனம உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவிலும் அதன் சுற்றுப்புரங்களிலும் MCU 2 நீண்ட இழைப்பருத்திப் பயிர்களுக்கு கடந்த சில வருஷங்களாக பூச்சி நோய் விழுவதைத் தடுக்க விவசாய இலாகா நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற இராமநாதபுரம் ஜில்லா பிளானிங் கமிட்டியின் கோரிக்கையை ஷி ஜில்லா கலெக்டர் சர்க்காருக்கு அனுப்பினரா ?

(ஆ) அதன் பேரில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

(இ) மத்திய சர்க்கார் பருத்தி அபிவிருத்திக் கமிட்டிக்கு இதை அறிவித்து இந்த நோயைத் தடுக்க ஒரு நிரந்தரமான ஆராய்ச்சி ஸ்தாபனத்தை அந்தப் பகுதியில் நிறுவும்படி செய்ய சர்க்காருக்கு எதேனும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No such request from the Planning Committee, Ramanathapuram District, has so far been received by the Government.

(*b*) Does not arise.

(*c*) No, Sir.

[31st October 1958

Guinea-worm disease in North Arcot district

* 760-I. *Q*—**Sri P. S. SANTHANAM** : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தாலூகாக்களில் நரம்பு சிலந்தி இருந்து வருகிறது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) அதை தடுப்பதற்கு முன்கூட்டி சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Surveys were carried out in the district as early as 1954 and in subsequent years. Super-chlorination of drinking-water sources once a fortnight was carried out in 1956 and 1957. DDT treatment of drinking water sources once in two months is being carried out now in the endemic villages. Top priority is given for the provision of safe water-supply in the affected villages under the Local Development and Rural Water Supply Schemes.

Sri M. K. SOMASUNDARAM : வட ஆற்காடு ஜில்லா மாதிரி இதர இடங்களிலும் நரம்புச் சிலந்தி வியாதி பரவிக் கொண்டிருப்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ஆம். தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அதோடு இப்பொழுது ஒரு சென்ட்ரல் ஸ்கீம்—இரண்டு வருஷத்திற்குள் இதை எப்படியாவது ஒழித்துவிடவேண்டுமென்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Poultry Research Station

* 760-J *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons trained as fieldmen in the Poultry Research Station;

(*b*) the number of persons employed after completion of training; and

(*c*) Whether any consideration is shown to the candidates of backward communities among those who have completed their training in the matter of regular employment?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) 43.

(*b*) 20.

(*c*) Yes, Sir.

Sri V. K. KOTHANDARAMAN : இப்போது பயிற்சி எத்தனை மாதம் கொடுக்கப்படுகிறது ? அதற்காக பயிற்சி பெறுகிறவர்களுக்கு எவ்வளவு உதவி செய்யப்படுகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்தப் பயிற்சி நான்கு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. டியூஷன் பீஸ் 50 ரூபாய் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

Mr. SPEAKER : **Questions are over.**

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION *re* RISE IN PRICE OF RICE IN TANJORE DISTRICT.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member, Sri K. Anbazhagan, proposing the adjournment of the business of the House for the purpose of discussing a matter of urgent public importance, viz., the failure of the Government to control the rise in the price of rice in the Tanjore district.

According to Rule 49 (iv) of the Assembly Rules, no adjournment motion can be moved on a subject which has been discussed in the same session.

SRI K. ANBAZHAGAN : There was no discussion about this, Sir.

MR. SPEAKER : There was a discussion on this subject.

SRI K. ANBAZHAGAN : Sir, the earlier discussion was on food production and not on the price of paddy.

MR. SPEAKER : There was a discussion about this also. I would like to know the views of the Hon. Home Minister.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே உணவு நிலைமையைப்பற்றித்தான் விவாதிக்கப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தியும், உணவுப் பொருள்களுடைய விலையையும் ஒன்றுடன் ஒன்று இணைந்த விஷயம். அப்போதும் இவை பற்றி பேசப்பட்டது. எனக்குக் கிடைத்த விவரங்களை அப்போது அளித்தேன். அதில் இப்போது அதிக மாறுதல் இல்லை. ஆனாலும் இப்போதுள்ள நிலவரம் என்ன என்பதைப்பற்றி அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு தான் வருகிறது. இந்தப் பிரச்னையை ஒரு ராஜ்யம் மாத்திரம் தனியாக முடிவு செய்வதில் பயன் இல்லை. தெற்குப் பிராந்தியத்தில் உள்ள மற்ற ராஜ்யங்களுடன் கலந்து பேசி ஒரே ஒரு முடிவுக்கு எல்லோரும் வரவேண்டியதாக இருக்கிறது. இதைப்பற்றியும் அரசாங்கம் கவனித்து வருகிறது. இன்னும் சில நாட்களில் தென் பிராந்திய உணவு மண்டல ராஜ்யங்களின் உணவு மந்திரிகளும், மத்திய அரசாங்கத்தின் உணவு மந்திரியும் கலந்து பேசி ஒரு ஏற்பாடு செய்வதற்கு முடிவாகியிருக்கிறது. ஆகவே இந்த நிலையில் இதைப்பற்றி ஒரு விவாதம் வந்தாலும் கூட அதைப்பற்றி நான் ஒன்றும் விசேஷமாக இப்போது குறிப்பிடுவதற்கில்லை. மேலும் இது அவசரமான பிரேரணை என்று கருதி சபையை ஒத்தி வைத்து விவாதம் செய்யத் தகுந்ததும் அல்ல என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I do not give permission for the adjournment motion. If the hon. Member wants any further elucidation, he can put a short notice question.

The next item is ' Government Motion '.

THE HON. SRI C. SUBRAMANIAM : I think the next item is a ' statement under Rule 40 '.

MR. SPEAKER : I have not got it with me. If there is any, we shall take it up to-morrow.

III.—GOVERNMENT MOTION.

ELECTION OF A MEMBER TO THE STATE LIBRARY COMMITTEE.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That in pursuance of Rule 2 (1) (v) of the Madras Public Libraries Rules, 1950, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect one person to the State Library Committee constituted under section 3 of the Madras Public Libraries Act, 1948 (Madras Act XXIV of 1948) ".

The motion was put and carried.

MR. SPEAKER : With reference to the motion of the Minister for Finance and Education regarding the election of one Member of this Assembly to the State Library Committee, I fix 11 a.m. on Monday, the 3rd November 1958 as the time within which nomination papers of candidates for election to the State Library Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 1 p.m. on Monday, the 3rd November 1958. I also fix 3 p.m. on Monday, the 3rd November 1958 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely one, a poll will be taken on Tuesday, the 4th November 1958 between the hours of 9 a.m. and 1 p.m.

The election will be by the ordinary method and not according to the principle of proportional representation by means of the single transferable vote.

IV.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL HOLIDAYS) BILL, 1958 (L.A. BILL NO. 19 OF 1958).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Bill, 1958 (L.A. Bill No. 19 of 1958) as amended by the Select Committee be taken into consideration ".

இந்த மசோதா பொறுக்குக் கமிட்டியால் திருத்தப்பட்டது. இதை யோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பிரேரேபிக்கிறேன். இந்த மசோதா இந்த மன்றத்தில் 3–5–58-ல் விவாதிக்கப்பட்டு பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்டது. பொறுக்குக் கமிட்டி இதை நன்றாக பரிசீலனை செய்து சில திருத்தங்கள் செய்திருக்கின்றன. முக்கியமான திருத்தங்கள் 3-வது ஷரத்துக்கும் 5-வது ஷரத்துக்கும் செய்யப்பட்டிருக்கின்றன. முன்பு (ஷரத்து 3) மே மாதம் முதல் தேதி விடுமுறை நாளாக இருக்கவேண்டும் என்று தொழிலாளர்களிடையே பெரும் பகுதியினர்கள் விரும்பினால் அவ்வாறு விடுமுறை நாளாக விட
10-10 a.m. வேண்டும் என்ற பிரிவு இருந்தது. ஆனால் அது அனாவசியமான சர்ச்சைகளையும் தகராறுகளையும் உண்டாக்கும் என்ற காரணத்தினால் பொறுக்குக் கமிட்டியில் அதைப்பற்றி யோசித்து தொழிலாளர்கள் அந்த தினத்தை விடுமுறை தினமாகக் கருதவேண்டுமென்றால் இன்ஸ்பெக்டர் அதை பரிசீலனை செய்து ஷரத்து மூன்றின்கீழ் பண்டிகை தினங்களில் ஒரு நாளாக விடுமுறை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.]

31st October 1958] [Sri M. Bhaktavatsalam]

மேலும் முப்பது நாட்கள் தொடர்ந்து அவர்கள் வேலை செய்திருந்தால் இந்த விடுமுறைக்கு அவர்கள் தகுதி உள்ளவர்கள் என்ற பிரிவு இருந்தது. தேசீய விடுமுறை நாளாக இரண்டு நாட்கள் லீவு விடப்பட்டிருக்கிறது. இவைதான் முக்கியமான மாறுதல்கள்.

மேலும் பொறுக்குக் கமிட்டியில் சில அங்கத்தினர்கள் ஒன்றிரண்டு யோசனைகளைச் சொன்னார்கள். அவை ஏற்கப்படவில்லை. இப்போது மீண்டும் அவற்றை திருத்தங்கள் வாயிலாக வலியுறுத்தினால் அவற்றை அரசாங்கம் ஏன் ஏற்க முடியாமல் இருக்கிறது என்பதற்கு நான் விவரமாக பதில் சொல்லுகிறேன்.

தொழிலாளர்களுக்கு விடுமுறை கொடுக்கும் பிரச்னை பலநாட்களாக இருந்து வருகிறது. சிலர் தாராளமாகக் கொடுத்துக் கொண்டும் வருகிறார்கள். பெரும்பாலான தொழிற்சாலைகளில் இந்த விடுமுறை என்பது மிகவும் குறைவு. ஏழு நாட்கள் வேண்டாம், ஐந்து நாட்கள் கூட கிடையாது. ஆகவே சட்ட பூர்வமாக விடுமுறை நாட்கள் இன்னது என்று நிர்ணயிக்க வேண்டுமென்ற பிரச்னை வெகு நாட்களாக இருந்து வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு மத்திய அரசாங்கமும் தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் இவர்களோடுகூட இந்தப் பிரச்னையை விவாதித்திருக்கிறது. விடுமுறை என்பதையே தொழிலதிபர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் இவ்வளவு விடுமுறை கொடுக்க முடியாது என்று கூறிக் கொண்டு வந்தார்கள். இருந்தாலும் விடுமுறை கொடுக்கத்தான் வேண்டும் என்று மத்திய அரசாங்கம் கருதியது. இந்த அரசாங்கமும் கருதியது, இதர அரசாங்கங்களும் கருதின. குறைந்தபட்சம் இரண்டு தேசீய விடுமுறை நாட்கள், ஐந்து பண்டிகை நாட்கள் கொடுக்கத்தான் வேண்டுமென்று எல்லோரும் கருதினோம். சென்னையில்கூட ஸ்டாண்டிங் கமிட்டியில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ராஜ்ய அரசாங்கங்களை இந்த மாதிரியாகச் சட்டம் செய்ய வேண்டுமென்றார்கள். அதற்குமேல் இந்த மசோதா தயாரிக்கப்பட்டது. அப்போதும் கூட விடுமுறை என்று அளித்தால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று தொழிலதிபர்கள் தங்கள் ஐயத்தைத் தெரிவித்தார்கள். இருந்தாலும் இந்த அரசாங்கம் குறைந்தபட்சம் ஏழு நாட்களாவது கொடுக்கத்தான் வேண்டுமென்று இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது.

விடுமுறை என்றால் எல்லோரும் வரவேற்கிறார்கள். விடுமுறை வேண்டும் என்று கோரும் மனப்பான்மையைச் சற்று சிந்திக்க வேண்டும். நாட்டின் செல்வம் வளரவேண்டும். வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்றால் நம் மக்கள் உழைப்புக்கு அஞ்சக்கூடாது. இருந்தாலும் விடுமுறை கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் விடுமுறை தினத்தில் அவர்கள் வேலை செய்யும்படியாகச் சொல்லப்பட்டால் இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்பது இந்த மசோதாவின் அடிப்படை. பொறுக்குக் கமிட்டியினால் நல்ல முறையில் பரிசீலிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கிற இந்த மசோதாவை சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Bill, 1958 (L.A. Bill No. 19 of 1958) as amended by the Select Committee be taken into consideration."

I would like to know for how long we will have general discussion on the Bill and what time will be required for the clause by clause consideration of the Bill.

THE HON. SRI C. SUBRAMANIAM : I think one hour will be sufficient for the consideration and passing of the Bill.

MR. SPEAKER : I think we can have general discussion for 40 minutes and clause by clause consideration for 20 minutes. I think that will be all right.

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

*SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது நமக்கு முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற விடுமுறை மசோதாவை நான் வரவேற்கக்கூடிய அதே நேரத்தில் ஒரு சில அபிப்பிராயங்களையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த மசோதாவை நாம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே இப்போது எந்த எந்த தொழிற்சாலைகளில் எந்த எந்த மாதிரியாக விடுமுறை கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் பார்த்தாக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இன்றையதினம் பி. அண்டு ஸி. மில்லை எடுத்துக் கொண்டால் 11 தினங்கள் விடுமுறை பல நாட்களாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஹார்வீ மில்லில் 11 தினங்கள் கொடுக்கப்படுகிறது.

(Deputy Speaker in the Chair.)

சென்னையிலேயே இருக்கக்கூடிய சிம்சன் தொழிற்சாலையில் 14 தினங்கள் கொடுக்கப்படுகிறது. அதே போன்று ஷாப்பு ஆக்டை எடுத்துக்கொண்டாலும் வாரத்திற்கு ஒரு நாள் சம்பளத்துடன் விடுமுறை வருகிறது. பண்டிகை தின விடுமுறை, 36 தினங்கள் இருக்கிறது. ஹோ அண்டு கோ. கம்பெனியை எடுத்துக் கொண்டால் 21 தினங்கள் விடுமுறை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் இருக்கும்போது இன்றைக்கு நாம் 7 தினங்கள் விடுமுறை அளிக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வருகிறோம். இது அவ்வளவு சரியல்ல. ஆகவே 15 தினங்களாவது விடுமுறை கண்டிப்பாக அளிப்பதாக இருக்கவேண்டும். இல்லை 10 தினங்களாவது கொடுத்தால்தான் நல்லது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதையும் சர்க்கார் கவனிக்க வேண்டும்.

அதே நேரத்தில் மே தினத்தை விடுமுறை தினமாக விடவேண்டும். அகில உலகத் தொழிலாளர் தினமாக அன்றைக்கு உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஆனால் பொறுக்குக் கமிட்டியில் இந்த ஷரத்து சம்பந்தமானதைத் திருத்தியிருக்கிறார்கள். மே விடுமுறை தினமாக விட வேண்டுமென்று தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் விரும்பினால் இன்ஸ்பெக்டர் இதைப் பரிசீலனை செய்து பண்டிகை நாட்களில் ஒரு நாளாக விடுமுறை அளிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னபோது நான் மிகவும் வருத்தப்பட்டேன். அதிகாரிகளிடத்தில் போகக் கூடிய விஷயங்கள் எவ்வாறு முடிவு செய்யப்படுகின்றன, எத்தனை நாட்கள் தாமதமாகின்றன என்று நமக்குத் தெரியும். ஆகவே கண்டிப்பாக மே தினத்தை விடுமுறை தினமாக டிக்ளேர் பண்ண வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். சம்பளத்துடன் மற்றொரு விடுமுறை தினத்தில் அதற்குப் பதிலாக வேலை செய்துவிட வேண்டுமென்று செய்தாலும் போதாது. அதே போன்று 30 தினங்கள் தொடர்ந்தாற்போல வேலை செய்தால் ஒரு நாள் விடுமுறை கொடுக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. இன்றைக்கு லீவு வேண்டுமென்று தொழிலாளர்கள் எழுதிக் கொடுத்தாலும், லீவு தருவதாகச் சொல்லிவிட்டு, கடைசியில் அதை ஆப்செண்ட் என்று பலவிடங்களில் போட்டு வருகிறார்கள் என்பது நமக்குத் தெரியாதது அல்ல. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கிற காரணத்தினால்தான் 20 தினங்களாவது விடுமுறை கொடுக்கப்படவேண்டுமென்று முன்பு சொன்னோம்.

அதே போன்று சர்க்கார் நிறுவனங்களிலும் வசதி இருக்கவேண்டும். அவர்களுக்கு விதிவிலக்கு கொடுப்பது சரியல்ல. இன்றைக்கு நாம் பார்ப்போமானால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் லேபர் பாலிஸி தனியார் நிறுவனங்கள், சர்க்கார் நிறுவனங்கள் ஆகிய இரண்டிலும்

31st October 1958] [Sri V. K. Kothandaraman]

வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரேவிதமான பாதுகாப்பு, வசதி எல்லாம் இருக்கவேண்டுமென்று உள்ளது. அப்படி இருக்கும்போது இன்றைக்கு இந்த மசோதாவில் சர்க்கார் நிறுவனங்களுக்கு விதிவிலக்கு என்று சொல்லியிருப்பது முன்னுக்குப் பின் முரணான விஷயமாக இருக்கிறது. இந்தக் காரணத்தினால் விதிவிலக்கு என்பதை அறவே எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழ் வருஷப் பிறப்பு அன்றைக்கும் விடுமுறை அளிப்பதற்கு வசதி செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த ராஜ்யம் தமிழ் நாடு என்று வழங்கப்படுகிறது; தமிழ் வளர வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இந்த ராஜ்ய சட்டசபையில் நடவடிக்கைகள் எல்லாம் தமிழிலேயே நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படி இருக்கும்போது, நாம் தமிழ் வருஷப் பிறப்பு தினத்திற்கு தேசிய விடுமுறை அளித்தால்தான் நாம் தமிழுக்கு முக்கியத்துவம் அளித்தவர்களாவோம், தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் மதிப்பளித்தவர்களாவோம். எனவே. தமிழ் வருஷப் பிறப்பு நாளும் தேசிய விடுமுறை நாளாக ஆக்கப்பட வேண்டும். மசோதாவில் பண்டிகைகளுக்காக ஐந்து விடுமுறை நாட்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. இதை ஆறு நாட்களாக உயர்த்த வேண்டும். தேசிய விடுமுறை நாட்களாகிய ஜனவரி 26-ம் தேதி, ஆகஸ்டு 15-ம் தேதி ஆகிய இரு தினங்களுக்கு மட்டும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கப்படுவதற்கு மசோதா வகை செய்கிறது; தேசிய தினங்களின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்திருப்பதால் தான் மசோதாவில் அவ்வாறு நாம் ஷரத்துகளை வகுத்திருக்கிறோம். அதாவது விடுமுறை தினத்திற்கு முன்பு தொழிலாளி தொடர்ந்து 30 நாட்கள் வேலை செய்திருந்தால் தான் அவனுக்கு அந்த தினத்தில் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கப்படும் என்ற நிபந்தனைகளிலிருந்து இந்த தேசிய தினங்களுக்கு விலக்கு அளித்திருக்கிறோம். எனவே, தமிழ் வருடப் பிறப்பு தினத்தையும், மே தினத்தையும் தேசிய தினங்கள் என்று கருதி அவைகளையும் தேசிய விடுமுறை நாட்களாக ஆக்க வேண்டும்; அவைகளுக்கும் முன்பு நான் குறிப்பிட்ட விதிவிலக்கை அளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அத்துடன் பண்டிகை விடுமுறை நாட்களை ஆறு ஆக அதிகரித்து, தேசிய பண்டிகை விடுமுறை நாட்களை 10-ஆகவாவது உயர்த்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். மேலும், 5-வது பிரிவில், "தொடர்ந்து 30 நாட்கள் வேலை செய்திருக்க வேண்டும்" என்று இருப்பதை "தொடர்ந்து 10 நாட்கள் வேலை செய்து இருக்க வேண்டும்" என்று மாற்ற வேண்டுமென்று கூறிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். 10-20 a.m.

* **Sri J. MATHA GOWDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கு நிறைய நாட்கள் விடுமுறை அளிப்பது அவசியம். ஏற்கெனவே. தொழிலாளர்களுக்கு 20 நாட்களுக்கு ஒரு நாள் வீதம் விடுமுறை தினங்கள் அளிக்க வேண்டும் என்று விதித்திருக்கிறோம். இந்த மசோதாவில். தேசிய தினங்களுக்காக இரண்டு நாட்களும், பண்டிகைகளுக்காக 5 நாட்களும் விடுமுறை நாட்கள் அளித்திருக்கிறோம். பண்டிகை தினங்களுக்காக விடுமுறை நாட்களுடன் மே தினத்திற்கான விடுமுறை நாளையும் சேர்ப்பது அவ்வளவு உசிதமல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், மே தினம் என்பது உலகத் தொழிலாளர்களின் கொண்டாட்ட தினம். தமிழ் நாட்டில் பல பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. அந்த தினங்களில் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் ரஜா இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் இந்த விடுமுறை நாட்களை நாம் அளிக்கிறோம். அப்படிப்பட்ட பண்டிகை விடுமுறை நாட்களுடன் மே தின விடுமுறை நாளைச் சேர்ப்பது உசிதமல்ல. மே தினம் போன்ற கொண்டாட்ட தினங்களுக்கு விடுமுறை அளிப்பது அவ்வளவு உசிதமல்ல. மேலும். அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் மே தினத்தைக் கொண்டாடுவது பற்றி வேறுபட்ட அபிப்பிராயங்கள் கொண்டிருக்கின்றன. சில தொழிலாளர்கள் மே தினத்தைக்

கொண்டாடுவது அவசியமில்லை என்று கருதுகிறார்கள். அவர்களுக்கு அந்த தினத்தில் விடுமுறை வேண்டியதில்லை. மே தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று விருப்பம் சில பிரிவினருக்குத் தான் அந்த தினத்தன்று விடுமுறை வேண்டியிருக்கும்; அல்லது அந்த தினத்தில் தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்க வேண்டுமென்று சில அரசியல் கட்சிகள் தான் விரும்புகின்றன என்று நினைக்கிறேன். எனவே, மே தினத்திற்கு விடுமுறை அளிப்பது அவசியமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

சர்க்கார் துறைகளில் இருக்கும் ஊழியர்களுக்கும் இந்தச் சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்பதை நானும் ஆமோதிக்கிறேன். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். குந்தாத் திட்டம் போன்ற அத்தியாவசியமான திட்டங்களைக் காலாகாலத்தில் சர்க்கார் நிறைவேற்ற வேண்டும். அந்தத் திட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை அரசாங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் என்று கருதிவிட முடியாது. திட்டம் நிறைவேறாதபடி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் சில அரசியல் கட்சிகள் அந்தத் திட்டங்களில் சம்பந்தப்பட்டுள்ள தொழிலாளர்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டுகிறார்கள். அந்தத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளிலோ நேரடி நடவடிக்கைகளிலோ இறங்கக் கூடாது என்று சட்டமியற்றலாம் என்று கூடக் கூறுவேன். அந்தத் திட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தாற்காலிகத் தொழிலாளர்கள்.

தொழிலாளர்களுக்கு தேசிய தினங்களிலும் பண்டிகை தினங்களிலும் விடுமுறை அளிப்பதற்கான மசோதா சபையில் முதன் முதலில் கொண்டு வரப்பட்டபோது அதன் மீது விவாதம் நடத்தினோம். அது பொறுக்குக் கமிட்டியால் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்களுடன் இப்போது இங்கே மறுபடியும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்த மசோதாவிற்கு திருத்தங்கள் கொடுக்க வேண்டியது அவசியமில்லை. தொழிலாளர்களுக்கு இன்னும் விடுமுறை நாட்கள் அளிக்க வேண்டுமென்றால், தொழில் அதிகாரிகளின் சிபாரிசுப்படி வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகமாக விடுமுறை நாட்கள் அளிப்பதற்கு சட்டத்தைத் திருத்தலாம்.

நான் ஏற்கெனவே கூறியுள்ள காரணங்களால், சர்க்கார் துறைகளில் குந்தாத் திட்டம் போன்ற அத்தியாவசியமான திட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இந்த விடுமுறைகளை அளிக்க வேண்டுமென்பதை வற்புறுத்த முடியாத நிலையில் இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

முனிசிபாலிடிகள், பஞ்சாயத்துக்கள் போன்ற இடங்களில் வேலை செய்யும் சில தொழிலாளர்களுக்கு இந்த விடுமுறைகளை நிச்சயம் அளிக்க வேண்டும். அந்த இடங்களில் தெருக்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைப்பவர்கள். அவர்களுக்கு எந்த விதமான சலுகையும் இல்லை. அவர்களுக்கு இந்த விடுமுறைச் சலுகைகளை அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கும் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். தொழிலாளர்களுக்கு தேசீய, பண்டிகை தினங்களுக்காக எத்தனை நாட்கள் விடுமுறை அளிக்க வேண்டுமென்று இந்த மசோதாவில் விதிக்கப்பட்டிருக்கிறதோ அதை விட அதிகமான நாட்கள் அந்த தினங்களுக்காக தொழிலாளர்களுக்கு சில தொழிற்சாலைகள் விடுமுறை அளிக்கப் பட்டுவருகிறது என்றும், இந்த மசோதாவைச் சட்டமாக்குவதால் தொழிலாளர்களுக்கு என்ன பயன் ஏற்பட்டுவிடப்போகிறது என்றும் சிலர் பேசுவதை நான் பார்க்கிறேன். இந்த மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களை விட அதிகமான நாட்கள் விடுமுறை தொழிலாளர்களுக்கு சில பெரிய தொழிற்சாலைகளில் அளிக்கப்பட்டு வந்திருக்கக்கூடும். இந்த மசோதாவை நன்றாகப் பரிசீலித்துப்பார்த்தால் "இண்டஸ்ட்ரீயல் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ்" எவை எவை என்பது வரையறுக்கப்

பட்டிருப்பது தெரியும். அந்த வரையறையின் கீழ் ஆயிரக்கணக்கான சிறு தொழிற்சாலைகளும் பெரிய கடைகளும் எத்தனையோ தொழில் நிலையங் களும வருகின்றன. எனவே அவைகளில் வேலை செய்யும லட்சக் கணக் கான தொழிலாளர்களுக்கு, இதுவரை கிடைக்காத இந்த 7 விடுமுறை நாட்கள், மசோதா சட்டமான பிறகும் கிடைக்கும. இந்த 7 விடுமுறை நாட்களில் 2 தேசீய தினங்களுக்காகவும் மீதி 5 பண்டிகைகளுக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பண்டிகை விடுமுறை நாட்களுக்கான தினங் களை நிர்ணயிக்கும் உரிமை முதலாளிகளுக்கு மட்டுமே கொடுக்கப்படாம லிருப்பது மிக மிகப் பாராட்டத்தக்க அம்சமாகும. முதலாளிகளும் தொழிலா ளிகளும் இன்ஸ்பெக்டரும் சேர்ந்து அவைகளை நிர்ணயிக்க வேண்டு மென்று விதித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அந்த உரிமையை முதலாளிகளுக்கு அளித்தால் எதிர்பார்க்கக்கூடிய பலன ஏற்படாமல் போகும். சர்க்கார் அந்த உரிமையை முதலாளிகளுக்கு அளிக்காததின் மூலம, தாங்கள் முதலாளிகளின் நலன்களை கவனத்துவிட்டு தொழிலாளி களின் நலங்களைப் புறக்கணித்துக் கொண்டிருக்கவில்லை, தொழிலாளரின் நலனிலேயே அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்; இந்த அரசாங்கத்தின கொள்கையும் நோக் கமும முதலாளிகளுக்கும் முதலாளிகளின் கையாட்களுக்கும சலுகைகள் கொடுப்பதுதான என்று சொல்லுவது தவறு என்பதை அதன மூலம் நன்றாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். தாங்கள் தான தொழிலாளர் களின நலன்களைப் பாதுகாப்பதாக சில அரசியல் கட்சிகள் பறைசாற்றி வருகின்றன. ஆனால் காங்கிரஸ் அரசாங்கத்தார் தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். நாடு சுதந்திர மடைந்த ஆண்டாகிய 1947-லிருந்து இன்று வரையில், தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதற்காக சுமார் 20—25 சட்டங்கள் இயற்றப்பட்டிருக் கின்றன. மாநில சர்க்காராலும் மத்திய சர்க்காராலும அந்தச் சட்டங் கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

இந்தச் சட்டங்களின் வாயிலாக தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய சலுகைகளும் நலன்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின் றன. இது போன்ற சட்டங்கள் குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கு மட்டுமல்ல, விவசாயத் துறையிலும்கூட வெகு வேகமாக அரசாங்கம செய்து கொண்டு வருகிறது. ஆகவே இதுபோன்ற நலன்களை, தொழிலாளர்களின் நன் மைக்காக செய்யப்படும சட்டங்களையும், அதற்கான வாய்ப்புகளையும் செய் யும்போது ஒரு சில அரசியல் கட்சிகள் தங்கள் சுயநலத்திற்காக தாங்கள் தான எல்லாவற்றையும் செய்து வருகிறோம் என்ற தப்பானதொரு அபிப் பிராயத்தை மக்களிடையே பரப்பிக் கொண்டு வருகிறார்கள். நான் ஏற் கனவே சொன்னதுபோல், இச்சட்டத்தின் வாயிலாக தொழிலாளர்களுக்கு ஏழு நாட்கள் சம்பளத்தோடு கூடிய விடுமுறை கட்டாயமாக அளிப்பதோடு கூட அவர்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய முறையில்தான இந்த மசோதா அமைந்திருக்கிறது. தொழிலாளர்களுக்காக நல்ல பல சட்டங்கள் இயற்றப்பட்டு அவைகளை அவர்கள் இன்றைய தினம் அனுபவித்துக் கொண்டு வருகிறார் கள். தேசீய நாட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற எண் ணத்தினால்தான் ஆகஸ்ட் 15-ம் தேதியும், ஜனவரி 26-ம் தேதியும் கட்டாய விடுமுறை நாட்களாக்கப்பட்டிருக்கின்றன. தேசீய தினங்களை எல்லோ ரும் கொண்டாட வேண்டுமென்ற அடிப்படையில்தான இந்த இரண்டு நாட்களையும் கட்டாய விடுமுறை நாட்களாக வைத்து அந்நாட்களுக்கு அவர்களுக்குச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று இச்சட்டம் அமைந் திருக்கிறது. இதில் குறிப்பாக கவனிக்க வேண்டியது பெரிய தொழிற்சாலை களைப் பொறுத்துப் பார்க்கிறபோது, நேரடியாக தொழிற்சாலைகளில வேலை பார்த்து வரும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருந்தபோதிலும் கூட அவைகளில் மறைமுகமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது, அரசாங்கத்தின கவனத்திற்கு அடிக்கடி வந்துதான் இருக்கும். உதாரணமாக சிமெண்ட் தொழிற்சாலை யை எடுத்துக் கொள்ளலாம். சிமெண்ட் தொழிற்சாலையில் ஏறக்குறைய

[Sri S. Lazar] [31st October 1958

2,500 முதல் 3,000 கூலியாட்கள் வேலை செய்து வரக்கூடும். அதே சமயத்தில் மானேஜ்மென்டின் பிடியில் இல்லாத கண்ட்ராக்டர்கள் மூலம் பல ஆயிரக்கணக்கான பேர்கள் வேலை செய்து வருகிறார்கள். அதாவது, கண்ட்ராக்டர்கள் அமர்த்திக் கொள்பவர்கள். ஆகவே, அரசாங்கம் இப்பொழுது கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின் மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன், இந்த கண்ட்ராக்டர்களின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கிடைக்காது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நான் இதைக் குறிப்பிடுவதன் நோக்கம் என்னவென்றால், தொழிலாளர்களின் நலனுக்காகச் செய்யப்படுகிற இது போன்ற சட்டங்களின் நலன்கள், பலன்கள் அத்தனையும் தொழில் துறையில் இருக்கக்கூடிய அத்தனை தொழிலாளர்களுக்கும் கிடைக்கவேண்டுமென்றால், ஆரம்பமாகவாவது பெரிய பெரிய தொழிற்சாலைகளில் 500 அல்லது 1,000 நபர்களுக்கு மேல், தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யக் கூடிய தொழிற்சாலைகளிலாவது, கூலியாட்களை நேரடியாக வைத்துக் கொள்ளவேண்டும், இந்த கண்ட்ராக்ட் முறை இருக்கக்கூடாது என்ற முறையில் சரியானதொரு சட்டம் கொண்டு வந்தால் உள்ளபடியே நாம் கைக்கொண்டிருக்கும் கொள்கைகளும், நாம் இயற்றக்கூடிய சட்டங்களும் தொழிலாளர்களுக்கு நல்லமுறையில் பலனளிப்பதாகயிருக்கும். தொழிலாளர்களின் நலனிற்காக இச்சட்டம் கொண்டு வரும் இந்நேரத்தில் நான் மற்றொரு முக்கியமான குறிப்பையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு சில பெரிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் நேரடியாக வேலை செய்து வருவதன் காரணமாக இப்பொழுது அரசாங்கம் இயற்றும் சட்டங்களின் பலன் அவர்களுக்கு கிடைத்துக் கொண்டுவருகின்றன. ஒரு சில சுயநலம் கொண்ட தொழில் அதிபர்கள், மானேஜ்மென்டார் இந்தச் சட்டத்தினால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய பலன்கள் அவர்களுக்கு கிடைக்கக் கூடாது என்ற எண்ணத்தில் ஆங்காங்கு புதிய ஒரு சிருஷ்டியை உண்டு பண்ணிக் கொண்டு வருகிறார்கள். அதற்குப் பெயர்தான் "லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டி" என்பதாகும். லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டிகள் இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் எந்த இடத்திலே அவைகள் இருக்க வேண்டுமென்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவைகள் இருக்க வேண்டியது பெரிய தொழிற்சாலைகள் இருக்கக் கூடிய இடங்களில் அல்ல. ஆனால் மற்றவிடங்களில்தான் அவைகள் இருக்க வேண்டும். இந்தச் சட்டங்கள் அமுலாகாத இடங்களில் அவைகள் இருக்கலாம். அப்பொழுது காண்ட்ராக்டர்கள் அடையும் லாபத்தை தொழிலாளர்கள் தங்களுக்குள் பங்கிட்டு எடுத்துக் கொள்ள வாய்ப்பிருக்கும். அது வரவேற்கத்தக்கதே. இதுபோன்ற லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டிகளை சிமெண்ட், டெக்ஸ்டைல்ஸ் போன்ற தொழிற்சாலைகளில் புகுத்தினால் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய அத்தனை நலன்களும் அவர்களுக்குக் கிடைக்காது. அதே போன்று இந்த மாதிரி சட்டங்களினால் அப்படிப்பட்ட சொஸைட்டிகளுக்கும் லாபம் கிடைக்காது. அதன் கீழ் வேலை செய்யும் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும் இவைகளினால் ஏற்படக் கூடிய நன்மை கிடைக்காது. ஆகவே, லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டிகளை பெரிய தொழிற்சாலைகளில் புகுத்துவது கலவரத்தைத்தான் உண்டு பண்ணுகிறது. ஆகவே அவர்களுக்கு என்று தனியாக இடங்களை ஒதுக்கி, எந்தெந்த தொழிற்சாலைகளில், எந்தெந்த தொழில் நிலையங்களில் இது போன்ற லேபர் சட்டங்கள் அமுலுக்கு வர முடியாமல் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட இடங்களில் மட்டும் இவைகளைப் புகுத்தினால் நல்லது. அடுத்தபடியாக, தொழிலாளர்களின் நலனுக்காக கோடிக்கணக்கான ரூபாய் . .

DEPUTY SPEAKER : I want the hon. Member to be brief and not to take the time of the House in referring to such matters.

SRI S. LAZAR : கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு இயங்கி வருகிற தொழிற்சாலைகளில் . . .

31st October 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மசோதா தொழிலாளர்களுக்கு விடுமுறை கொடுப்பதைப் பற்றி மட்டுந்தான் ஆகவே மற்ற விஷயங்களைப்பற்றி கனம் அங்கத்தினர் பேசினாலும் அவை களைப் பற்றி என்னால் பதிலளிக்க இயலாது.

DEPUTY SPEAKER : I have already drawn the attention of the hon. Member to it.

SRI S. LAZAR : Very good Sir. தொழிலாளர்களின் நலனுக் காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவைப் பற்றி பேசும் போது, இதை விட முக்கியமான ஒரு சில நலன்களை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று சொல்வதை அரசாங்கம் மனதில் வைத்துக் கொண்டு செயலாற்றினால் உள்ளபடியே இது இன்னும் நல்லமுறையில் அமைய முடியும் என்பதினால்தான் குறிப்பிடுகிறேன். தவிர இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாவில் குற்றம் கண்டு பிடிக்கவேண்டுமென்ற நோக்கத்தினால் அல்ல நான் இவைகளைக் கூறுவது. ஆகவே, நான் சொன்ன விஷயங்களை அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக்கொண்டு தகுந்த சட்டங்கள் கொண்டு வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டு இம்மசோதாவை மீண்டும் ஒரு முறை வரவேற்றுக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : கனம் உதவி சபாநாயகர் அவர் களே, தொழிலாளர்கள் அனுபவிப்பதற்காக ஐந்து விழா நாட்கள் விடுமுறையும், இரண்டு தேசிய விடுமுறை நாட்களும் கொடுப்பது குறித்து அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் பொதுவாக வரவேற்கிற நேரத்தில் இதில் இருக்கிற ஒரு சில குறைபாடுகளையும் நான் இங்கு எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்படி அரசாங்கம் குடி யரசு தினமாகிய ஜனவரி 26-ம் தேதிக்கும், சுதந்திர நாளாகிய ஆகஸ்டு 15-க்கும் கட்டாய விடுமுறை அளிக்க வேண்டுமென்று அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறதோ அதே போன்று தொழிலாளர் தின மாகிய மே விழாவைக் கொண்டாடுவதற்கு, மே தினத்தைக் கொண்டாடு வதற்கு, தொழிலாளர்களுக்கு முழு உரிமையும் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மெஜாரிட்டி தொழிலாளர்கள் விரும்பினால் அந் நாளை விடுமுறை நாளாக ஏற்றுக் கொள்ளலாம் என்று இதில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு, அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தொழிலாளர்கள் இடையே சண்டைகள் ஏற்படும் என்பதில் சந்தேக மில்லை. அதற்கு ஆதாரமாக எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தி னர் மாதா கௌடர் அவர்கள் பேசின பேச்சில் மே தினத்திற்கு விடு முறை அவசியமில்லை என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். ஒரு சில கட்சிகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் மே தின விழாவைக் கொண்டாட வேண்டிய அவசியமில்லை என்று ஒரு முடிவு எடுத்தால் தொழிலாளர் களிடையே நல்லதொரு நாளை கொண்டாடுகிற நல்ல நேரத்தில் கட்சிப் பூசல்களுக்குத்தான் அது இடமளிக்கும் என்ற காரணத்தினால் எப்படி ஜனவரி 26-ந்தேதியும், ஆகஸ்டு 15-ந்தேதியும் கட்டாய விடுமுறை நாளாக ஆக்கப்பட்டிருக்கிறதோ அதேபோன்று மே தினத்தையும் கட்டாய விடுமுறை நாளாக ஆக்கவேண்டும். அதில் மெஜாரிட்டி அபிப்பிராயத்தைப்பார்த்து லீவ் விடவேண்டுமென்ற அவசியமில்லை. இந்தப் பாகுபாடு அவசியமில்லை. ஜனவரி 26-ம் தேதி ஆகஸ்டு 15-ம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மே தினத்திற்கும் உண்டு. அரசாங்கமும் இதை உணர்ந்திருக்கிறது என்று தான் நான் நினைக்கி றேன். ஏதோ காங்கிரசுக்கு எதிர்கட்சியாக இருக்கின்றவர்கள் இந்த மே தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள், அவர்கள் நடத்துகின்ற விழாக்களில் தொழிலாளர்கள் அதிகமாக கலந்து கொள்கிறார்கள் என்ற காரணத்திற்காக மே தினத்தை சேர்க்காமல் விட்டிருப்பது அவ்வளவு சரியல்ல. அதல்லாமல் அந்தந்த தொழில் ஸ்தாபனங்களில் இருக்கிற தொழிலாளர்களின் மெஜாரிட்டி அபிப்பிராயத்தைப் பொறுத்து மே

10.30 a.m.

10.40 a.m.

தினத்திற்கு விடுமுறை கொடுக்க வேண்டும் என்பது அதிகப்படியான குழப்பத்தைத்தான் உண்டு பண்ணும் என்று நம்புகிறேன். மேலும் இதனால் மனக்கசப்புத்தான் வளருவதற்கு இடமளிக்கும் என்றும் நம்புகிறேன். ஆகவே இதில் கட்சி வித்தியாசம் பாராமல் மே தினத்தை விடுமுறையாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

Sri P. S. CHINNADURAI : மதிப்புற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, சபை முன்பு பிரேரபணை செய்யப்பட்டிருக்கும் விடுமுறை நாட்கள் பற்றிய மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த மசோதாவினால், இதுவரை தேசீய நாட்களுக்கு விடுமுறை கொடுத்துவந்த போதிலும் அன்றைய தினத்திற்குச் சம்பளம் கொடுக்கப்படாமல் அல்லல் அளித்து வந்திருக்கும் தொழிலாளர்களுக்கு நிச்சியமாக நல்ல நிவாரணம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. விடுமுறை நாட்கள் 7 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த 7 விடுமுறை நாட்களில் இரண்டு தேசீய விடுமுறை நாட்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. தேசீய விடுமுறை நாட்கள் சம்பந்தப்பட்டவரையில் இந்த நாட்டில் பிறந்து இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்ற எவருக்கும் இந்த தேசீய விடுமுறை நாட்களில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு வோட்டு எடுப்பு நடந்தால் இதற்கு விரோதமாகப் போய்விடும் என்று அஞ்சுவதற்கு அவசியமே கிடையாது. தொழிலாளர்களிடையில் வாக்கெடுப்பு நடந்தால் இதற்கு எதிரான அபிப்பிராயமே இருக்காது என்பதை இந்தச் சபை முன்பு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஜனவரி 26-ம் ஆகஸ்டு 15-ம் காங்கிரஸ்காரர்களுக்கு மாத்திரம் உரியது என்று யாரும் நினைக்கக்கூடாது. இந்த நாட்டில் பிறந்த எல்லாக் கட்சிக்காரர்களுக்கும், எந்தக் கட்சியையும் சேராதவர்களுக்கும் உரிமையுள்ள தினம் என்பதை நான் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். அதேபோல் மே தினத்தை தொழிலாளர்களுக்குரிய தினமாகிய சட்டத்திலே சந்தேகத்திற்கு இடமின்றி எடுத்துச் சொல்லியிருக்க முடியும். அவ்வாறு செய்வார்கள் என்று எதிர்பார்க்கவும் செய்தோம். அத் தினத்திற்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்று நீண்டகாலமாக தொழிலாளர்களிடையில் கோரிக்கை இருந்து வருகிறது.

(Mr. Speaker in the Chair.)

மேதினத்தில் விடுமுறை கொடுக்க வேண்டும் என்று இந்த நாட்டில் தொழிலாளர்களின் ஸ்தாபனமாக இருக்கின்ற அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ், தேசீய தொழிற்சங்கக் காங்கிரஸ், ஐக்கிய தொழிற் சங்க காங்கிரஸ், இந்து மஸ்தூர் சபா போன்ற தொழிற்சங்க ஸ்தாபனங்கள் சொல்லி வருகிறது. அப்படிப்பட்ட நிலைமையில் மே தினத்தை ஒரு பண்டிகை தினமாகக் கொடுக்க வேண்டும் என்று ஐயத்திற்கு இடமில்லாமல் சட்டத்தில் சேர்த்திருப்பார்களானால் நன்றாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன். அவ்விதமில்லாமல் மெஜாரிட்டியின் மூலம் தீர்மானிக்கப்பட்டால் மே தினத்தில் விடுமுறை கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருப்பது மேலும் சிக்கலை உண்டுபண்ணுவதற்குத் தான் இடமளிக்கும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். உயர்ந்த நிலையில் இருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்களே இம்மாதிரியான வோட்டு எடுப்பில் பல கருத்து வேறுபாடுடையவர்களாக இருக்கலாம். அதன் காரணமாக இதற்கு எதிராக வோட்டு செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். மேலும், ஒவ்வொரு ஆண்டிலும் தொழிலாளர்களின் மத்தியில் ஒரு பிளவும் மனஸ்தாபமும் ஏற்படுவதற்கு இது இடம் அளித்து விடக்கூடும் என்று நான் அஞ்சுகின்றேன். மே தினம், தொழிலாளர்களுடைய ஐக்கியத்தை வலியுறுத்துகின்ற தினம். தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்ற ஒரு தினம். ஆகவே இந்த தினத்திற்கு முக்கியத்துவம் அளித்து அதற்கு விடுமுறை அளிக்கவேண்டும் என்று அரசாங்கத்தினிடத்தில் பணிவன்புடன் வேண்டிக்

கொள்கிறேன். இதில் விசேஷமாக சிக்கல் ஒன்றும் ஏற்படுவதற்கில்லை. ஆகவே அரசாங்கம் பெருந்தன்மையாக இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக விடுமுறை நாட்கள் சம்பந்தப்பட்டவரையில் இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் ஏழு நாட்கள் குறைவு என்று பலர் குறைப்பட்டுக்கொள்ளலாம். இப்போதும் பல நிறுவனங்களில் பல பண்டிகை நாட்களாக விடுமுறை கொடுக்கப்பட்டு வருகிறது இப்போது ஏழு நாட்கள் தானே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சிலர் நினைக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தொழிலாளர்கள் அதிகமாக விடுமுறை நாட்களை ஏன் விரும்புகிறார்கள் என்றால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போதாமல் இருப்பது தான். அவர்களுக்கு போதிய சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றால் அவர்கள் வேலையில்லாமல் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கமாட்டார்கள். இப்போது இருக்கின்ற நிலைமையில் ஏதோ பண்டிகை என்ன பெயரில் சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் என்றுள்ள நினைப்புத்தான் தொழிலாளர்களுக்கு இருந்து வருகிறது. அப்படிப் பார்க்கிறபொழுது இப்போது வைத்திருக்கிற ஏழு நாட்கள் விடுமுறை என்பது சரியானது தான் என்று நினைக்கிறேன். அதோடு அவர்களது ஊதியத்தை உயர்த்த வேண்டியதுதான் முக்கியமான அம்சம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது அரசாங்கத்தில் வேலை பார்க்கின்றவர்களுக்கு 23 அல்லது 24 நாட்கள் விடுமுறை கொடுக்கப்படுகிறது. அதோடு இந்த மசோதாவை ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது அதிலிருந்து மூன்றில் ஒரு பங்கு நாட்கள்தான் மற்றத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதைப்பற்றி நான் இப்போது சொல்லவிரும்பவில்லை. எப்படி இருந்தபோதிலும் அதிகமான பண்டிகை விடுமுறை நாட்களைப் பெறுவதினால் மட்டும் தொழிலாளர்கள் திருப்தி அடைந்து விட முடியாது. அதோடு அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதின் மூலமும், பஞ்சப்படியை உயர்த்துவதின் மூலமும் தான் அவர்கள் திருப்தி அடைய முடியும். அதைத்தான் அவர்கள் அரசாங்கத்தினிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இதில் 30 தினங்கள் தொடர்ந்தாற்போல் வேலை செய்திருந்தால் தான் விடுமுறை கிடைக்கும் என்று கண்டிருக்கிறது. அதாவது "Immediately preceding such a holiday" என்பதற்குப் பதிலாக preceding such a holiday என்றிருந்தால் நன்றாக இருக்கும். இதில் 30 நாட்கள் சர்வீஸ் உடைய ஒவ்வொரு தொழிலாளிக்கும் இந்தப் பண்டிகை விடுமுறை கிடைக்கும் என்ற உறுதி இருக்கவேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இது பொருந்தாது என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இது 10-50 a.m. பொருந்தாது என்றால் சர்க்கார் ஊழியர்களுக்குள்ளது போல 23 விடுமுறை நாட்கள் என்பது பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன். ஒருகால் அதனை மனதில் கொண்டு தான் இதனைப் பொருந்தாது என்று போட்டிருக்கிறார்கள் என்று நான் ஐயுறுகிறேன். இதேமாதிரி ஒரு சமயம் தொழில் அமைச்சர் கனம் வெங்கட்ராமன் அவர்களுடைய கவனத்திற்கு சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பளம் குறைவு என்றும், மற்றவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகளும் அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று கொண்டுவரப்பட்டபோது. அவர், இதாத் தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய சலுகைகள் வேண்டுமா அல்லது சர்க்கார் ஊழியர்களுக்கு இருக்கக்கூடிய சலுகைகள் வேண்டுமா. இந்த இரண்டிலே எது வேண்டும் என்று அவர்கள் தீர்மானிக்கவேண்டும் எனச் சொன்னார். அதை இப்போது நினைக்கும் போது தான் உண்மையிலேயே எனக்கு இந்தச் சந்தேகம் ஏற்படுகிறது. இதிலே இப்போது விதி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதிலிருந்து. அந்த நிறுவனத் தொழிலாளர்கள் சர்க்கார் ஊழியர்களுக்குரிய விடுமுறை நாட்களை அனுபவிக்கப் போகிறார்களா அல்லது அனுபவித்து வருகிறார்களா என்று தெரியவில்லை. இதைப்

பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனுபவித்து வருகிறார்கள் என்றால் இப்போது இந்த மசோதாவிலே விதி விலக்கு அளித்திருப்பது சரிதான். அந்தச் சலுகை இல்லாமலிருந்தால் நிச்சயமாக இந்த விதி விலக்கு தேவையற்றது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எப்படியும் இந்த மசோதா நன்மை அளிக்கத் தக்க மசோதா. இதனை நான் வரவேற்கிறேன்.

*Sri R. SRINIVASA IYER : ஸார், இந்த மசோதாவிலே விடுமுறை நாட்களைப் பற்றி மட்டும் விவாதிக்கப் படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருப்பதால் இதைப் பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டிய தில்லையென்றாலும் என்னுடைய அபிப்பிராயத்தைக் கூற விரும்புகிறேன்.

வேலை கொடுக்கிறவர்களுக்கும், வேலை செய்கிறவர்களுக்கும், Employers Employees இடையே உள்ள பாந்தவ்யத்தில் எவ்வளவு தூரம் நிர்ப்பந்தமாகப் பிரவேசிக்கலாம் என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். காபிடலிஸ்டுகளுக்கும் லேபருக்கும் உள்ள உறவில் பல விதங்களில் பிரவேசிக்க விட்டோம். அந்த வகையிலே தான் ஷாப் ஆக்ட், கேடரிங் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ் ஆக்ட், சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட பீடி இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட் முதலிய சட்டங்களை யெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம். இப்போது நிர்ப்பந்தமாக லீவு கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டம் ஏற்படுத்தப்போகிறோம். அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி இப்போதே அநேக தொழிற் சாலைகளில் இதைப் பார்க்கிலும் அதிகப்படியான லீவு கொடுத்து வருகிறார்கள். மனம் ஒப்பி வேலை கொடுக்கிறவர்களும், வேலை செய்கிறவர்களும், இருவரும் சம்மதப்பட்டு லீவு கொடுக்கப்படுகிறது அந்த லீவு நாட்களுக்குச் சம்பளமும் கொடுக்கப்பட்டு வருகிறது. மத்திய சர்க்கார் நிறுவின கமிட்டியிலும், பம்பாயில் நடந்த கமிட்டியிலும், நம் ராஜ்யத்தில் நடந்த கமிட்டியிலும் கூட அதிகப்படியான லீவு கொடுக்க முதலாளிகள் ஆட்சேபிக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கனம் லேபர் அவர்கள் சொன்ன மாதிரி இது எல்லாத் தொழில்களுக்கும் பொருந்துமானதால், சிறு சிறு ஷாப்புகளுக்கும் பொருந்துமானதால் இதனால் லட்சக்கணக்கான தொழில்கள் பாதிக்கப்படும். கெடுதலாக பாதிக்கப்படும் என்று சொல்லவில்லை. இதிலேயுள்ள இரண்டொரு செக்ஷன்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது 7 நாட்களுக்கு விடுமுறை கொடுக்கிறோம். அதற்கென பிரத்யேக ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ளவேண்டும். ரிஜிஸ்டரை சரியாக வைத்துக்கொள்கிறார்களா என்று இன்ஸ்பெக்டர் அபிப்பிராயப்படுகிற போதெல்லாம், "அட் ஆல் ரீஸனபிள் டைம்ஸ்", உள்ளே புகுந்து பரிசோதித்துப் பார்க்கலாம். அது சரியாக வைக்கப்பட்டு வருகிறதா என்று அவர் பரிசீலிக்கலாம். இதை அமல் நடத்த 8, 9 செக்ஷன்களில் பெனால்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 25 ரூபாய் அபராதம் போடலாம் என்று போடப்பட்டிருக்கிறது. இரண்டாவதும், அதற்குப் பிந்தின குற்றங்களுக்கும் 250 ரூபாய் வரை அபராதம் போடலாம். 9-வது செக்ஷனிலே, அப்ஸ்ட்ரக்ஷன் செய்தால், அதாவது இன்ஸ்பெக்டர் போய் பரிசீலிப்பதைத் தடுத்தால், இம்பிரிஸன்மெண்ட், அதாவது ஜெயில் தண்டனை கூடக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இதைப் பொருத்த அளவிலும் இன்னும் மற்ற இதரச் சட்டங்களில் இருக்கக்கூடிய இதே வித சில நிர்ப்பந்தங்களைப் பார்க்கும்போது ஹராஸ்மெண்ட் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. அதே மாதிரி இதுவும் இடம் கொடுக்காதா என்று பார்க்க வேண்டும். சிறு தொழில்கள் ஆரம்பிக்கிறவர்களுக்கும், பெரிய தொழில்கள் இதர பிராந்தியத்தைப் போல தனியார் துறையில் கோடிக்கணக்கான முதலீடு செய்கிறவர்களுக்கும், அடிப்படை எம்ப்ளாயர்-எம்ப்ளாயீ பாந்தவ்யத்தில் பிரவேசித்து நிர்ப்பந்தம் ஏற்படுத்தினால், இந்த நிர்ப்பந்தங்களுக்குப் பயந்து புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்படாமல் போகும். அதோடு ஆரம்பித்து நடத்தப்படும் தொழில்களும் நிறுத்தப்படக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். விடுமுறை கொடுப்பதால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று குறிப்பிட நான் விரும்பவில்லை. இதே

31st October 1958] [Sri R. Srinivasa Iyer]

மாதிரி நாம் போனால் எந்த அளவிலே போய் நிற்கப் போகிறோம் என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏற்கனவேயே தனியார் துறையில் நடத்தப்பட்டு வருகிற சில பெரிய தொழிற்சாலைகளில், வேலை செய்கிறவர்களின் சில நடவடிக்கைகள் காரணமாக என்று சொல்லப்படுகிறது, நஷ்டம் ஏற்பட்டு அதனால் மில்கள் நிறுத்தப்படுகிறது என்றும் நஷ்டப்பட்டாலும் கூட சர்க்கார் அதை எடுத்து நடத்தவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. சர்க்கார் எடுத்து நடத்தி நஷ்டம் ஏற்பட்டால், அந்த நஷ்டத்தை எந்தப் பணத்திலிருந்து ஈடு செய்வது ? சாராதாரண ரயத்துக்கள் கொடுக்கக்கூடிய லேண்ட் ரெவின்யூவிலிருந்தும் அந்த நஷ்டம் ஈடு செய்யப்படும். இந்த மாதிரி போனால், தொழிலாளர்களுக்கும், தொழில் கொடுப்பவர்களுக்கும் இடையே உள்ள சுமுகமான உறவை அரசியல் கட்சிகள் ஏற்படுத்தினால் தொழில் முறை சரியாக நடக்காது என்று வற்புறுத்திப் பல முறை சொல்ல விரும்புகிறேன். லீவ் கொடுக்கவேண்டாம் என்று, லீவ் கொடுப்பதைப்பற்றிச் சொல்லுகிறேன் என்று யாரும் எண்ணிவிடக்கூடாது.

அதே நேரத்தில் சொல்லிக்கொள்ளாமல், உத்திரவு பெறாமல், அமைதி பெறாமல், அப்ஸெண்டாக இருந்தால் அதைப்பற்றி என்ன விதியிருக்கிறது ? சரியாக வேலை செய்யாவிட்டால் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க என்ன விதி இருக்கிறது. நீக்கினால்தான் அதற்கு மேல் அப்பீல், ரிட் பெடிஷன் என்றெல்லாம் இருக்கிறது. ஊதியம் ஜாஸ்தியாக வேண்டும். லீவ் ஜாஸ்தியாக வேண்டும் என்று கேட்கிறார்கள். அதே நோக்கில் efficiency of service, efficiency of work, quantity of work turned out இதற்கெல்லாம் யார் உத்திரவாதம் ? அதற்கு யாரும் உத்திரவாதம் இல்லை. சுமுகமான காண்ட்ராக்ட் பேஸிஸில், நல்ல முறையில் இருவரும் செய்து நடந்தால்தான் efficiency ஏற்படும் என்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதே நோக்கில் கனம் சின்னதுரை அவர்கள் சொன்னது போல சம்பளத்தோடு லீவ் கிடைத்தால் யாராக இருந்தாலும் சந்தோஷம் தான். லீவ் விட்ட பிறகு, லீவுக்கு மறுநாள் வந்து அதற்கு ஈடாக நல்ல முறையில் உற்பத்தியை அதிகரிப்பார்களா என்றால், அதுதான் குறைவு. இதற்கு நான் யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் போகப் போக காபிடலிஸ்ட் லேபர் பாந்தவ்யத்தை நிர்பந்தமான முறையில் ஏற்படுத்துவது நல்லதா என்பதைச் சற்று சிந்தித்து முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், 7 நாட்கள் வரை தான் லீவு கொடுக்கப்பட போகிறது இந்த மசோதாவின் பிரகாரம். அதுவும் தேசீய விடுமுறை நாட்களுக்கும். பண்டிகை நாட்களுக்கும்தான். அதுவும் நம் தமிழ் நாட்டில் முக்கியமான பண்டிகை நாட்கள் பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை நாட்கள் இப்போதே இந்த நாட்களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது என்று நினைக்கிறேன். தீபாவளிக்கு அவ்வளவு கடைகளையும் சாத்திவிடுகிறார்கள். அப்படித் தீபாவளிக்குத் திறந்திருந்தாலும் மறுநாள் மூடிவிடுகிறார்கள். உத்தியோகம் கொடுக்கிறவர்களுக்கும், உத்தியோகம் செய்கிறவர்களுக்கும் இடையேயுள்ள பாந்தவ்யத்தில் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டாமென்று எல்லாக் கட்சிகளையும் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : Mr. V. K. Ramaswami Mudaliar (Sri M. Kalyanasundaram rose). How am I to know that the hon. Member desires to speak unless he tells me in advance? If hon. Members want to speak, it is better that they inform the Speaker. Members should not expect me to call every Member and ascertain 11
whether he is anxious to speak. a.m.

Sri M. KALYANASUNDARAM : I told the Deputy Speaker.

Mr. SPEAKER : I am sorry. He gave me the name of the Leader of the Opposition only. Anyway, let him speak.

[31st October 1958

11-00 a.m. **SRI M. KALYANASUNDARAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் கொஞ்சம் விடுமுறை நாட்கள் குறைவாக இருக்கிறது என்ற கருத்தும் இருக்கும். இது அதிகமாகக்கூட இருக்கிறது என்ற கருத்தும் இருக்கும். ஆனால் விடுமுறை என்றால் என்ன என்பதை அறியாத தொழிலாளர்களுக்கு, வருஷத்திற்கு 7 நாட்கள் விடுமுறை உண்டு என்ற நிலைமையை ஏற்படுத்துகின்ற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இது கூட முதலாளிகளுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அவர்களுக்காக நாம் பரிந்து பேச வேண்டிய அவசியம் இல்லை என்பது என் அபிப்பிராயம். தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசினாலே, உற்பத்திப் பெருக்கத்திற்கு அபத்து வந்துவிட்டது என்று கூறுவதை நாம் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்பது என் அபிப்பிராயம். ஆனால் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் பற்றி எப்படி எடுத்துச் சொல்வது என்பதுகூட புரியாமல் சொல்லலாம். 52 தினங்கள் வருஷத்திலே. வார விடுமுறைகள். அதற்குமேல் 9 நாள், இன்னும் 69 நாட்களுக்கு மேல் விடுமுறை என்பது பெரும்பாலான தொழிற்சாலைகளில் கிடையாது. 7 தினங்கள் கொடுத்து விட்ட பிறகும் கூட வேலை காலத்திலே அதிக உற்சாகத்தில் வேலையில் ஈடுபடுவார்கள். தொழிலாளர்களுக்கு லீவு கொடுத்தால் உற்பத்தி பெருகுமே தவிர குறையாது. அவர்களை நிர்ப்பந்தம் செய்யக்கூடாது. அதுதான் உற்பத்திக்கு மிகவும் அவசியமென்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அந்த விடுமுறைகளைக் குறைப்பதனால் மட்டும் உற்பத்தியைப் பெருக்குவது முடியாது. உற்பத்திக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமென்ற முதலாளிகளுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு நாம் ஏமாந்து போகவேண்டாமென்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விடுமுறை கொடுப்பதால் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நோக்கில், வேலை தினங்களில் மேலும் அதிகமான உற்சாகத்தோடு வேலையில் ஈடுபடமுடியும்.

இந்த மசோதா மீது ஒழுங்கு சம்பந்தமாக விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு வேறு மசோதாக்கள் இருக்கின்றன. நண்பர் ஸ்ரீனிவாச ஐயருக்குத் தெரியாமல் இருக்கலாம். தொழிலாளர்கள் தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ள முடியாது. அதற்காக "கோடு ஆப் டிஸிப்ளின் இருக்கிறது". முதலாளிகளுக்கும் இருக்கிறது. தெரியாமல் இருந்தாலும் ஸ்ரீனிவாசய்யர் தெரிந்துகொண்டு பேசியிருக்கலாம். முதலாளிகளுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு தொழிலாளர்கள் ஒழுங்கு முறை தவறி நடந்துகொள்கிறார்கள் என்ற முறையில் பேசி இருக்கவேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் கூட இன்னும் 7 தினங்கள்தான் விடுமுறை அதிகமாகக் கிடைக்க இருக்கிறது. இதில் சில குறைபாடுகளும் இருக்கின்றன. அதைப்பற்றி மட்டும் நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று, சம்பளம் என்று வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிற சமயத்தில் போனஸைச் சேர்க்கக் கூடாது. சில தொழிலாளர்களுக்கு உற்பத்தி போனஸ் இருக்கிறது. அட்டெண்டன்ஸ் போனஸும் இருக்கிறது. 26 தினங்கள் வேலை செய்தால், கூட 4 ரூபாய் சேர்த்துக் கொடுக்கக்கூடிய வகையில் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட போனஸை விலக்கு விட்டு விடுவார்கள் என்ற காரணத்தினால்தான் போனஸை லாபத்தின் மீது கொடுக்கப்படுகின்ற போனஸ் என்று சேர்க்கக் கொள்ளவேண்டும். அப்படி மாதாமாதம் கொடுக்கக்கூடிய உற்பத்திப் போனஸ், அட்டெண்டன்ஸ் போனஸ் சம்பளமாகக் கருதப்படவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இன்னும் விடுமுறை தினத்துக்கு சம்பளத்தை நிர்ணயிப்பதில் குறைபாடு இருக்கிறது. செக்ஷன் ஐந்தில் அதற்கு முந்திய ஒரு மாசம் சம்பாதித்து இருக்கக்கூடிய ஊதியத்தை சராசரியாகக் கணக்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. தொழிலாளர்களுடைய விருப்பத்திற்கு மாறாக முதலாளிகளுடைய நிர்ப்பந்தத்தினால் சில நிலைமைகள் ஏற்படுகின்றன. அதாவது மின்சார வெட்டு மூலமாக அல்லது வேறு

31st October 1958] [Sri M. Kalyanasundaram]

காரணத்தினால் வேலை தடைப்பட்டாலும் அவர்களுடைய சம்பளம் குறைந்து விடும். ஆகையால் தொழிலாளர்கள் தாங்களாக வேலைக்கு வராமல் "ஆப்சென்ட்" ஆகி இருந்திருந்தால் அதற்கு ஊதியம் அளிக்கச் சொல்லவில்லை. வேறு காரணங்களால் தொழிலாளர்களுடைய வருமானம் குறையுமானால் அந்தக் குறைவான வருமானத்தின் மீது சராசரி எடுத்து விடுமுறை நாட்களுக்குக் கூலியை நிர்ணயிப்பது அநீதியாகும். ஆகையால் தான் நான் கொடுத்துள்ள திருத்தங்களில் அந்தப் பிரிவு ஆலோசனைக்கு வரும்பொழுது நான் விவரமாகப் பேசலாம் என்று நினைக்கிறேன். அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டத்தை எல்லோரும் ஒருமுகமாக நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக நான் இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். மேல் நாடுகளில் "இண்டர்நேஷனல் கோடு" பிரகாரம் இவ்வளவு விடுமுறை நாட்கள் இல்லாதிருந்தபோதிலும் நம் தேசத்தில் அதிகமான நாட்களை இந்த மசோதாவின் மூலமாக கொடுத்திருப்பதற்கு நான் ரொம்பவும் பாராட்டுகிறேன். முக்கியமாக நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு பரஸ்பரமான நிலை ஏற்படும். இரண்டு பேரும் நன்றாக ஒத்துழைத்தால்தான் நமக்கு வேண்டிய அந்நியச் செலாவணி கிடைக்கும். தேசத்தில் உற்பத்தி பெருகும். இதை யாரும் மறுக்க முடியாது. அதற்காக இரண்டு பேரும் நன்றாக ஒத்துழைத்து கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும்.

இந்த அடிப்படைகளைக் கொண்டு விடுமுறை நாட்களைப் பற்றித் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் இருந்துவந்த போதிலும் சர்க்கார் இந்தச் சமயத்திலாவது இந்த மசோதாவைக் கொண்டு வந்ததைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். முக்கியமாக உணவு உற்பத்திக்குத் தொழிலாளர்கள் நன்றாகப் பாடுபடவேண்டும். அவர்களுடைய மனப்பான்மையைக் கொஞ்சம் மாற்றிக்கொண்டு நன்றாக உழைப்பதற்கு முன்வரவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே முறையில் மானேஜ்மெண்டாரும் நல்ல முறையில் தொழிலாளர்களை நடத்தி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வரவேண்டும். இதில் 10-வது செக்ஷன் முக்கியமானதாகும்.

ரிசர்வ் பாங்குக்கு மட்டும் இதிலிருந்து சில விதி விலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதைச் சார்ந்த மற்ற பாங்குகளுக்கு எல்லாம் இந்தப் 10-வது விதிப்படி விதிவிலக்கு கொடுக்காத காரணம் என்னவென்று தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் அவருடைய பதில் உரையில் சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன். மற்ற பாங்குகளுக்கும் விதி விலக்கு கொடுக்கப்படாததைப்பற்றி சர்க்கார் நன்றாக யோசித்து அவைகளுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும். இந்த மசோதாவை நன்றாகப் பரிசிலித்து நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். பொதுவாக நான் இந்த மசோதாவை ஆதரிக்கின்றேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் அடிப்படை தொழிலாளர்களுக்கு ஓரளவு விடுமுறை கொடுக்கவேண்டுமென்பதுதான். விடுமுறை என்றாலே அர்த்தம் அந்த விடுமுறை நாட்களில் அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை என்றாலும் அவர்களுக்குச் சம்பளம் உண்டு என்பதுதான். ஓரளவாகிலும் இந்தக் குறிப்பிட்ட அளவுக்கு ஏழு நாட்களாகிலும் விடுமுறை கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த மசோதாவின் அடிப்படை. பொதுவாகத் தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் பரஸ்பரம் அவர்களுக்கிடையே இருக்கவேண்டிய நல்லுறவு முதலியனவெல்லாம் பொதுவான பிரச்சினை. அந்தப் பிரச்னையைப்பற்றி அப்பொழுதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது, சட்டங்கள் செய்கின்றோம். மற்ற ஏற்பாடுகளைச் செய்கின்றோம். அவைகளை இதிலே கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை.

[Sri M. Bhaktavatsalam] [31st October 1958

ஓரளவு விடுமுறை, வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புகொள்வார்கள். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நாம் பொதுவாக அரசாங்கக் காரியங்களைப்பற்றி ஒரு குறைபாடு சொல்வதுண்டு. நம் நாட்டில்தான் அரசாங்கக் காரியாலயங்களுக்கு அதிகமான விடுமுறை விடப்படுகிறது என்று. மற்ற நாடுகளில் அவ்வளவு நாட்கள் விடுமுறை இல்லை என்று சொல்வதுண்டு. 23 நாடுகள் என்று
11-10 a.m. சொன்னார்கள். அந்தமாதிரியாக அதிகமான விடுமுறை கொடுப்பதுபற்றி பேசப்பட்டது. ஏறக்குறைய மற்றவர்களைப் போலவே தொழிலாளர்களும் அதிகமான விடுமுறையை அநுபவித்து வருவதாகத்தான நான் தப்பாக எண்ணிக்கொண்டிருந்தேன். அப்புறம் அதைப்பற்றி விசாரித்தபோது இந்த 7 நாட்கள் கூட அவர்கள் விடுமுறை அநுபவிக்கவில்லை என்று தெரிந்தபோது ஆச்சரியமாக இருந்தது. அவசியம் ஒரு சட்டம் செய்தாக வேண்டும் என்ற நிலைமையை உணர்ந்தேன். சில அலுவலங்களில் அப்போதே பழக்கவழக்கங்களினால் அதிகமான விடுமுறை கொடுத்து வந்தார்கள். பி. அண்டு ஸி. மில்லில் 11 நாட்கள் உண்டு. இன்னும் சில கம்பெனிகளில் இதையும் விட தாராளமாக லீவு வழங்கி வந்திருக்கிறார்கள். ஆகவேதான் இப்போது 7 நாட்கள் என்று சட்டம் கொண்டு வரும்போது இந்த ஏற்பாடு முன்பு இருந்த பழக்கவழக்கத்தை பாதிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். ஏழு நாட்கள் கூட லீவு இல்லாமல் இருந்த இடங்களில் இப்போது இந்த 7 நாட்களாவது கொடுக்க வேண்டுமென்று செய்திருக்கிறோம். இரண்டு தினங்கள் தேசீய நாட்கள். இந்த மாதிரி மசோதா இல்லாத காரணத்தினால்தான் அப்போது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 15 தேதிக்கு லீவு விடவேண்டும், ஜனவரி 26-க்கு லீவு விடவேண்டும் என்று தனித்தனியாக உத்தரவு போட்டுக்கொண்டு வந்திருக்கிறோம். இந்த மசோதா அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்து விட்டது. சுதந்திர தினம், குடியரசு தினம் இரண்டுக்கும் லீவு, மற்றும் ஐந்து பண்டிகைகளுக்கு லீவு என்று குறைந்தபட்சமாக வகை செய்கிறது இந்த மசோதா.

திரு. சின்னதுரை சொன்னதை நான் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன. சுதந்திர தினத்தன்றும், குடியரசு தினத்தன்றும் விடுமுறை அளிப்பதற்கு யாரும் ஆட்சேபிப்பார்கள் என்று அரசாங்கம் கருதவில்லை. தேசீய தினங்களாக அந்த இரண்டு தினத்தையும் கருதுவதில இந்தியர்களிடையே ஆட்சேபம் இருக்கும் என்ற ஐயம் கிடையாது. அதறகாக இந்த மசோதாவில் அந்த இரண்டு தினத்தையும் நாங்கள் சேர்த்துவிடவில்லை. கனம் கோவிந்தசாமி அப்படி ஒரு காரணத்தைக் குறிப்பிட்டார். அது சரியல்ல. அப்படிச் சொல்வது இந்த நாட்டின் கௌரவத்திற்கே குறைவு.

SRI A. GOVINDASAMY : அப்படி நான் குறிப்பிடவில்லை. குடியரசு தினம், சுதந்திர தினம் இரண்டுக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படி மே தினத்திற்கும் கொடுக்கக் கூடாதா என்று தான் சொன்னேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய இரண்டையும் தேசீய தினங்களாகக் கருதுவதில் அபிப்பிராய பேதம் இருந்தாலும் உள்ளுக்குள் வைத்துக்கொள்வார்களே தவிர வெளிப்படையாகச் சொல்ல முடியாது.

தேசீய நாட்கள் இரண்டுக்கு விடுமுறை என்று சொல்லியிருப்பதை போல ஏன் மற்றொரு நாளைக்குச் சொல்லக் கூடாது ? மே தினத்தையும் அப்படிச் சேர்த்திருக்கலாமே என்று சொன்னார்கள். மே மாதம் முதல் தேதியைத் தொழிலாளர் நாளாகக் கொண்டாடுகிறார்கள். அரசாங்கம் அதை உணராமல் இல்லை. ஆனால் ஒரு நாளை நாம் நம்முடைய நாளாகக் கொண்டாடுவதற்கு விடுமுறை வேண்டுமென்பது இல்லை. மே தினம் போல லீவு விடவேண்டுமென்றால் இன்னும் அநேக நாட்கள் சொல்லலாம். இது தமிழர்களுடைய நாடு. சித்திரை முதல் தேதி லீவு விட்டால் நல்லது என்பர். இன்னொரு நாள். தமிழ் நாட்டில் ஆயுத பூசை

31st October 1958] [Sri M. Bhaktavatsalam]

சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைக்கு எல்லாத் தொழிலாளர்களும் ஆயுதங்களை வைத்துக் கும்பிடுகிறார்கள். அன்றைக்கு லீவு விடவேண்டுமென்று சொல்லலாம். இப்போதுள்ள ஏற்பாட்டின்படி அன்றைக்கு லீவு வேண்டுமென்றால் பண்டிகை நாளாக எடுத்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் வேலை செய்துகொள்ளமுடியும். மற்றொரு நாள். பொங்கல் தினம். தமிழர் திருநாள் என்று அன்றைக்கும் நம் நாட்டில் இப்போது மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே இரண்டு தேசீய நாட்களுக்கு லீவு விட்டுவிட்டு மே தினமாக இருந்தாலும், தமிழ் வருஷப் பிறப்பு, ஆயுத பூசை, பொங்கல் என்று என்றைக்கு வேண்டுமோ அன்றைக்கு வருஷத்தில் ஐந்து பண்டிகை தினங்கள் விடுமுறை அளிக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறோம்.

தொழிலாளர்களுடைய தலைவர்கள் என்னிடம் வருத்தப்பட்டுக் கொள்ளக்கூடாது. நான் தவறுதலாகச் சொல்லவில்லை. மே தினத்தை நம்முடைய தேசீய தினங்களோடு நான் ஒப்பிடுவதற்கில்லை. இரண்டையும் சமமாக நான் வைப்பதற்குத் தயாராக இல்லை. அப்படி வைப்பதானது நம்முடைய சுதந்திர தினத்திற்குள்ள முக்கியத்துவத்தை, குடியரசு தினத்திற்குள்ள முக்கியத்துவத்தைக் குறைத்ததாகத்தான் ஆகும். ஆகையால் தான் பண்டிகை தினங்களோடு மே தினம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மற்றொன்று சர்க்காருடைய தொழிற்சாலைகளைப் பற்றியது. அவர்களுக்கு ஏன் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். ஏற்கெனவே அவர்களுக்குத் தனியாக விதிகள் இருக்கும்; சலுகைகள் இருக்கும். கனம் அங்கத்தினர் சின்னதுரை சொன்னார்கள். சிங்கோனா தொழிற்சாலை போன்ற ஸ்தாபனங்களில் இப்போது சரியான முறையில் விடுமுறை அளிக்கப்படவில்லை என்பதாக. அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் நாங்கள் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம். பொதுவாக எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரேவிதமான வசதி, சலுகை எல்லாம் இருக்கவேண்டுமென்பதுதான சர்க்காருடைய கொள்கை.

அநேக கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஏற்கனவே பல வசதி, சலுகை எல்லாம் இருக்கிறது. அவற்றையெல்லாம் பரிசீலிக்காமல் இந்தச் சட்டமும் அவர்களுக்குப் பொருந்தும் என்று சேர்த்துவிட முடியாது. இது சிக்கலை விளைவிக்கும்.

சில பெரிய பெரிய திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெரிய பெரிய திட்டங்களில் நாம் எல்லோரும் அக்கறை கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டங்கள் துரிதமாக நிறைவேற்றப்பட்டாக வேண்டும். அதையும் கவனிக்கவேண்டும்.

இன்னும் 30 நாட்கள் தொடர்ந்தாற்போல வேலை செய்தால்தான் இந்தச் சலுகை உண்டென்று குறிப்பிடப்படுவது கூடாது என்று சொன்னார்கள். பொறுக்குக் கமிட்டியில் இவையெல்லாம் நன்றாகத்தான் பரிசீலனை செய்யப்பட்டது. போனஸ் விஷயத்தைப்பற்றிச் சொன்னார்கள். போனசு கூடாது என்று அர்த்தம் இல்லை. அதை மாற்றுவது சரியல்ல. பின்னால் அது சிக்கல்களைக் கொடுக்கும். திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது ஒரு வாரச் சம்பளம் சராசரி பார்த்து லீவு நாள் சம்பளமாகக் கொடுக்கப்படும் என்று இருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதைக்கூட நான் ஏற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். அப்போது அதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கிறேன். பொதுவாக தொழிலாளர்களுடைய சலுகை அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக அமைய வேண்டும். தொழிலதிபர்களின் ஒத்துழைப்பையும் பெற்றதாக அமையவேண்டும். அப்போதுதான் இருதரப்பாரும் உற்சாகமாக வேலை செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பு உண்டாகும். நாட்டின் செல்வம் பெருகும். ஆகவே இந்த மசோதாவை ஆதரித்துப் பேசியவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Bill, 1958 (L.A. Bill No. 19 of 1958) as amended by the Select Committee, be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : The motion is—

" That clause 2 do stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" In sub-clause (b) (i) in line 9 *after* the word ' reward ' *add* the words ' badli temporary or by any other name '."

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

" In sub-clause (g) (ii) (a), *after* the words ' any bonus ' *add* the words ' based on profit '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

*SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, 2-வது பிரிவிலுள்ள உப பிரிவு (b) (i)-ல் **' roward '** என்ற வார்த்தைக்குப் பிறகு **' badli temporary or by any other name '** என்ற வார்த்தைகளைச் சேர்க்கவேண்டுமென்று என் திருத்தம் கூறுகிறது. **' Including an apprentice '** என்ற வார்த்தைகளை மட்டும் சேர்த்தால் போதாது. இந்தக் காலத்தில் பல தொழிற்சாலைகளில் பல தொழிலாளர்கள் பலவிதமான பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள். சில தொழிலாளர்கள் **' badli '** தொழிலாளர்கள் என்றும் சிலர் **' temporary '** தொழிலாளர்கள் என்றும் சிலர் கூலிகள் என்றும் சிலர் **' apperentices '** என்றும் அழைக்கப்படுகிறார்கள். முதலாளிகள் இவர்களுக்கு இம்மாதிரியான பெயர்களைக் கொடுத்து இவர்களுக்குக் குறைந்த கூலி கொடுக்கிறார்கள். எம்பளாயர் என்ற பதத்திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும் உப பிரிவில் **' whether called a managing agent, manager, superintendent or by any other name '** என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் இந்தப் பிரிவிலும் நான் குறிப்பிடும் வார்த்தைகளைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய கோரிக்கை மிகவும் நியாயமானது. என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, உப பிரிவு (g) (ii) (a)-ல் **' any bonus '** என்ற வார்த்தைகள் இருக்கின்றன. எனவே, எந்த போனஸும் சம்பளத்துடன் சேர்ந்ததாகக் கருதப்பட மாட்டாது என்று மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. சம்பளத்துடன் சேர்ந்ததாக எல்லாப் போனஸையும் கருத வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சில சமயங்களில் லாபத்தின் அடிப்படையில் போனஸ் கொடுக்கப்படுகிறது. அந்த போனஸை சம்பளத்துடன் சேர்ந்ததாகக் கருத வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதைக் கூட " டெபர்ட் வேஜஸாக"க் கருதவேண்டுமென்று தொழிற் சங்கங்கள் சொல்லி

31st October 1958] [Sri M. Kalyanasundaram]

வருகின்றன. அப்படி இருக்கும்போது எந்த போனஸையும் சம்பளத்துடன் சேர்ந்ததாகக் கருதக்கூடாது என்று சொல்வது சரியல்ல. எனவே, உப பிரிவு (g) (ii) (a) யிலுள்ள வார்த்தைகளுக்குப் பிறகு 'based on profit' என்ற வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். நம் ராஜ்யத்தில் பல தொழிற்சாலைகளில், தொழிலாளர் களுக்குத் தொடர்ந்து 20 நாட்கள் வேலை செய்தால் இரண்டு தினங்களுக் கான கூலி வீதம் "அட்டென்டன்ஸ் போனஸ்" கொடுக்கப்பட்டு வருகிறது. அது ஒருவித போனஸ். இன்னும் சில தொழிற்சாலைகளில் தொழிலாளர் களுக்கு உற்பத்தி போனஸ் என்ற ஒரு போனஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட போனஸ்களாவது சம்பளத்துடன் சேர்ந்தவையாகக் கருதப் பட்டால்தான் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் இருக்கும். கொள்கைக்காகத்தான் இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன். ஏனென்றால், அந்த போனஸ் தொகையை ஒவ்வொரு தினத்திற்குமாகப் பிரித்தால் சராசரியாக தினத்திற்கு ஒரு அணு அல்லது இரண்டணாத் தான் தொழிலாளிக்குக் கிடைக்கும். சில போனஸ்களை சம்பளத்துடன் சேர்ந்த தாகக் கருதவேண்டுமென்று கூறப்பட்டு வரும்போது எந்த போனஸையும் சம்பளத்துடன் சேர்ந்ததாகக் கருதக்கூடாது என்று ஒரு சட்டத்தில் குறிப்பிடுவது உசிதமல்ல என்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் சபாநாயகர் அவர் களே, கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் இப்போது பிரேரேபித் திருக்கும் திருத்தத்தை பொறுக்குக் கமிட்டியிலும் பிரேரேபித்தார். அதற்கு அவசியமில்லை என்பதை பொறுக்குக் கமிட்டியின் தலைவர் கனம் திரு. வெங்கடராமன் அப்போது விளக்கினார். "எம்ப்ளாயீ" என்ற பதம் டெம்பரரி தொழிலாளி, "பதிலி" தொழிலாளி ஆகிய எல் லோரையும் குறிக்கக்கூடிய முறையில்தான் அந்தப் பதத்திற்கு மசோதா வில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் திரு. வெங்கட ராமன் தெரிவித்தார். எனவே, கனம் அங்கத்தினர் குறிப்பிடும் திருத் தத்தை மசோதாவில் புகுத்த வேண்டியதில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் அவர் கள் பிரேரேபித்திருக்கும் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் கொடுத்திருக்கும் திருத்தம் சம்பந்தமாக ஒன்று கூற விரும்புகிறேன். தொழில் சம்பந்தமான எல் லாச் சட்டங்களிலும் "வேஜஸ்" என்றால் என்ன என்று வரையறுக்கப் பட்டிருக்கிறது. அந்த விளக்கங்களுக்கொத்த முறையில் தான் இந்த மசோதாவில் "வேஜஸ்" என்ற பதத்திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக் கிறது. இப்போது மசோதாவில் "வேஜஸ்" என்ற பதத்திற்கு நாம் கொடுக்கும் விளக்கம், இப்போது அமலிலிருக்கும் தொழிற் சட்டங்களில் அந்தப் பதத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்திற்கு முரண்பட்ட தாக இருக்கக்கூடாது. அந்தக் காரணத்தால் தான் உப பிரிவு (g) (ii) (a)-ல் "எந்த போனஸும்" என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிறோம்; அங்கே எந்தவிதமான போனஸ் சம்பளத்துடன் சேர்ந்ததாகக் கருதப் படக் கூடாது என்று விதித்தால், பின்னர் சிக்கல்கள் ஏற்படும். ஆகை யால் கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பிரேரேபித் திருக்கும் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: நான் பிரேரேபித்திருக்கும் திருத் தத்தை கனம் அமைச்சர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், உப பிரிவு (g) (ii) (a)-யிலிருந்து 'any' என்ற வார்த்தையை நீக்கிவிட்டு அங்கே 'bonus' என்ற வார்த்தையை மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்று சொல் லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Where is the amendment? The hon. Member cannot suggest an amendment on the floor of the House.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** : மசோதாவில் அவ்வாறு திருத்தம் செய்ய வேண்டியதில்லை என்றும், கனம் அங்கத்தினர் கூறிய விஷயங்களை மனதிற் கொண்டு, பின்னர் விதிகளை வகுக்கும்போது தகுந்த முறையில் விதிகளை வகுப்போம் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

The amendments were, by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. SPEAKER : The motion is—

" That clause 2 do stand part of the Bill ".

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" *After* the figure, letter and word ' 15th August,' *add* the words and figure, " Tamil New Year Day and 1st May ', and *for* the words ' and five other ' *substitute* the words ' and six other ' ;"

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" (i) *For* the following words, letters and figures ' on the 26th January . . . other holidays ', *substitute* the words, letters and figures, ' on the 26th January, the 1st May, the 15th August the Deepavali, the Pongal and the Tamil New Year Days and 4 other holidays.'

and

(ii) *for* the existing proviso *substitute* the following :

' Provided that if in any of the industrial establishments more number of holidays are allowed such number shall not be reduced.

Provided further that where any one of the said three holidays happen to fall on a weekly holiday, another holiday in lieu thereof shall be allowed in consultation with the employees '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

* **SRI V. K. KOTHANDARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, தொழிலாளர்களுக்குத் தேசிய பண்டிகை தினங்களுக்காக அளிக்கும் விடுமுறை நாட்கள் மொத்தம் 10 நாட்களாக இருக்க வேண்டும் என்பது தான் என் திருத்தத்தின் நோக்கம். விடுமுறை கொடுப்பதற்குரிய தேசீய தினங்களுடன் தமிழ் வருடப் பிறப்பு தினத்தையும் மே தினத்தையும் சேர்க்க வேண்டும் என்பதும் பண்டிகைகளுக்காக விடுமுறை அளிக்க வேண்டிய நாட்கள் மொத்தம் ஆறு என்று விதிக்க வேண்டும் என்பதும் என் திருத்தத்தின் நோக்கங்கள். மே தினம் தொழிலாளர்களால் கொண்டாடப்படவேண்டிய தினம் என்பதை யாரும் மறுக்கவில்லை. அதே நேரத்தில், சர்வ தேசக் கண்ணோட்டம் உடையவர்கள்தான், மே தினத்தைத் தொழிலாளர்கள் கொண்டாடவேண்டுமென்று சொல்கிறார்கள் என்றும்

31st October 1958] [Sri V. K. Kothandaraman]

கூறப்படுகிறது. அந்த தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் கூடச் சொல்கிறார். அவர் சர்வதேசக் கண்ணோட்டம் உடையவரா ? அல்லாதவரா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தமிழ் வருடப் பிறப்பு தினத்தையும் நம் ராஜ்யத்தில் தேசிய விடுமுறை தினமாக நிர்ணயிக்கவேண்டும். தொழிலாளர்களுக்கு அதிக நாட்கள் விடுமுறை அளித்தால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் மேலே நாடுகளில் தொழிலாளர்களுக்கு அதிக விடுமுறைகள் கொடுத்து முதலாளிகள் உற்பத்தியை அதிகரிக்கிறார்கள் என்பதை அறிகிறோம். விடுமுறை கொடுக்கப்படுவதால் தொழிலாளர்கள் புத்துணர்ச்சி பெறுகிறார்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. எனவேதான் பல நாடுகளில் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு அதிக விடுமுறைகள் அளித்து உற்பத்தியை அதிகப்படுத்துகிறார்கள் என்பதை அறிகிறோம். இதற்கு உதாரணமாக சோவியத் ரஷ்யாவையோ சீனாவையோ நான் காட்டினால் அது ஆளும் கட்சியினருக்கு எட்டிக்காயாகவோ வேப்பங்காயாகவோ இருக்கும். இங்கிலாந்து அமெரிக்கா ஆகிய நாடுகளில்கூட முதலாளிகள் தொழிலாளர்களுக்கு அதிக விடுமுறைகள் அளித்து உற்பத்தியை அதிகப்படுத்துகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, தொழிலாளர்களுக்கு அதிக விடுமுறை நாட்கள் அளிக்கப்பட்டால், உற்பத்தியோ தொழிலாளிக்கும் முதலாளிக்கும் உள்ள உறவோ பாதிக்கப்படாது என்று தெரிகிறது. ஆகையால், தமிழ் வருடப் பிறப்பு தினத்தையும் விடுமுறைக்குரிய தினங்களுடன் சேர்ப்பதற்கு நாம் தயங்கவேண்டியதில்லை. தமிழ் வருடப் பிறப்பு தினத்திற்கு மிகவும் முக்கியத்வம் அளிக்கவேண்டும். பஞ்சாயத்துச் சட்டத்தில்கூட தமிழ் வருடப் பிறப்பிற்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். பஞ்சாயத்துக்களின் மெம்பர்கள் ஒரு தமிழ் வருடப் பிறப்பு தினத்தன்று பதவியேற்பார்கள் என்றும், மற்றொரு தமிழ் வருடப் பிறப்பு தினத்தன்று அவர்களுடைய பதவிக் காலம் முடிவடையும் என்றும் அச்சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த ராஜ்யத்திற்கு தமிழ் நாடு என்று பெயரிடுவதற்கு இந்த சர்க்கார் மறுப்பதால்தான் ஒரு வேளை தொழிலாளர்களுக்கு தமிழ் வருடப் பிறப்பு தினத்திற்கு விடுமுறை அளிக்கவும் மறுக்கிறார்களோ என்று நான் நினைக்கிறேன். தேசீய, பண்டிகை தினங்களுக்காக அளிக்கும் விடுமுறை நாட்களை 10 நாட்களாக அதிகரிப்பதற்கு வகை செய்யும் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். 11-30 a.m.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருப்பதற்கு முக்கிய காரணம், குறைந்தது 10 நாட்களாவது தொழிலாளர்களுக்கு விடுமுறை இருக்க வேண்மென்ற நோக்கத்தினால்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் லீவ் அதிகப்படியாகக் கொடுத்தால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று. அந்த விவாதத்தில் நான் இறங்க ஆசைப்படவில்லை. கூடுதல் மூன்று நாட்கள் விடுமுறை கொடுப்பதால் உற்பத்தி எந்த அளவு பாதிக்கப்படுகிறதோ அதற்கு அனுசரித்தாற்போல் ஏதாவது தினங்களில் கொஞ்ச நேரம் அதிகம் வேலை செய்ய தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டால் 10 நாட்கள் விடுமுறை விடுவதில் சர்க்காருக்கு கஷ்டம் ஒன்றும் இருக்காது என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சில பேர்களுக்குப் பொங்கல் தினம் முக்கியமானதாக இருக்கும், சில பேர்களுக்கு கிருஸ்த்மஸ் முக்கியமாக இருக்கும், சில பேர்களுக்கு வேறு சில நாட்கள் முக்கியமாக இருக்குமென்று. ஆனால் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சில தினங்கள் இருக்கின்றன. அதாவது, பொங்கல் தினம், வருஷப் பிறப்பு இம்மாதிரி தினங்கள். வேண்டுமானால் மே தினத்தைப்பற்றியாவது, சர்க்காரின் திருத்தத்தை ஒத்துக்கொள்கிறோம். மெஜாரிட்டி தொழிலாளர்கள் விரும்பினால் அன்று விடுமுறை விடுவது என்பதை. பாக்கியுள்ள தினங்களை யாவது, பொங்கல் தினம், வருஷப் பிறப்பு, ஆயுத பூஜை போன்ற நாட்களுக்கு கண்டிப்பாக லீவ் கொடுத்தாகவேண்டும். அது மட்டுமல்ல.

தொழிலாளர்கள் என்று சொல்லும்போது அவர்கள் தொழில்தான் செய்ய வேண்டும், பாக்கியுள்ள விஷயங்களில் அவர்கள் தலையிடக்கூடாது என்று நினைப்பது சரியல்ல. அது தவருகும். தேசம் முன்னேற வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி தேசம் முன்னேற வேண்டுமென்று சொல்கிற போது தொழிலாளர்களையும், மற்றவர்களையும் தள்ளி வைத்து விட்டு பாக்கியுள்ளவர்கள் மட்டும் முன்னேறவேண்டுமென்பதல்ல அதன் அர்த்தம். இம்மாதிரி தினங்களில் தொழிலாளர்களுக்கு லீவ் கொடுப்பதினால் அன்று அவர்கள் தங்கள் உழைப்பை, கவலைகளை மறந்து கலைகளிலும் கலாசாரத்திலும் அவர்களது மனதை ஈடுபடுத்தமுடியும் என்ற அடிப்படையில்தான் கொஞ்சம் அதிகமாக அவர்களுக்கு லீவ் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறேன். அதுமட்டுமல்ல. சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய லீவ் தினங்கள் வீக்லி ஹாலிடேஸ்ஸில் விழுந்தால் அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்த நாளிற்குப் பதிலாக இன்னொரு நாள் லீவ் விட வேண்டுமென்பதுதான் எனது திருத்தம். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் பழனிசுவாமி அவர்கள் மூன்ருவது பிரிவிற்கு கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் இந்த தேசத்தில் உள்ள எல்லாவிதமான மதங்களுக்கும், மதாபிமானிகளுக்கும் சரிசமமான உரிமைகளை வழங்குவது என்ற லட்சியத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தேசம் அதற்கு புறம்பாகப்போக வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் விரும்புகிருர் என்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும் என்று சொல்லிக்கொண்டு, அதற்கு நாமும் உடந்தையாகக்கூடும், ஆகவே இதை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று நான் முதலில் கேட்டுக்கொள்கிறேன். ஹிந்துக்கள் புனிதமாக கருதக்கூடிய தீபாவளி, சங்கராந்தி போன்ற பண்டிகைகளுக்கு லீவ் வேண்டுமென்று சொன்னர். அதேபோல், இந்த நாட்டில் தொழிலாளர்களும் சரி அல்லது தொழில் அதிபர்களானாலும் சரி, மற்ற மத அபிமானிகளும், மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள் அவர்களுக்கு புனிதமாகவுள்ள நாட்களுக்கு அவர்களும் லீவ் கேட்பார்கள். கிருஸ்தவர்கள் கிருஸ்மஸ்க்கு லீவ் வேண்டுமென்பார்கள், முஸ்லீம் சகோதரர்கள் ரம்ஸானுக்கு லீவ் வேண்டுமென்று கேட்பார்கள். அப்பொழுது அவர்கள் கேட்கிற நாட்களுக்கு விடுமுறை அளிக்கவில்லையென்ருல் சரிசமமான உரிமை எல்லோருக்கும் அளிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை பாதிக்கப்படும். ஐந்து நாட்கள் விடுமுறை என்பதை தொழிலாளர்கள் தாங்கள் விரும்புகிற போது பெற்றுக்கொள்ளலாம் என்று இதில் விதி இருப்பதே சர்க்காரின் நல்லெண்ணத்தினுல்தான். ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் அவர்கள் சொல்வதை நாம் ஏற்றுக்கொண்டால் சமநோக்கு கொள்கையிலிருந்து நாம் பிரள்வதாக இருக்கும். அடுத்தபடியாக, இங்கு வேருென்று பிரஸ்தாபிக்கப்பட்டது. மே தினம் என்பது உலகத்திலுள்ள தொழிலாளர்கள் தொழிலுக்குக் காட்டும் மரியாதை தினம், என்று. தொழிலுக்கு ஏற்றம் கண்ட தினம் என்று சொல்லப்படுகிறது. தொழிலுக்கு மரியாதை செய்யவேண்டுமென்று விரும்பினல் அதை ஓய்வு நாளாக் கொண்டாடக் கூடாது. அப்படி அதை ஓய்வு நாளாக கொண்டாடினல் அது தொழிலாளர்கள் ஓய்வுக்குக் கொடுக்கும் மரியாதையாக மட்டுமே ஆகும். ஆகவே, அன்று தொழிலுக்கு மரியாதை கொடுக்கும் தினம் என்று கருதப்பட்டால் அன்றுதான் தொழிலாளர்கள் மனம் விட்டு நன்கு தொழில் செய்ய வேண்டும். ஆகவே, அன்று நிச்சயமாக வேலை செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்களை வேலை செய்வதில் இருந்து நாம் தடை செய்யக் கூடாது. ஆகவே அத் தினத்தை ஓய்வு தினமாகக் கருதாமல் அதை ஒரு தொழில் தினமாகக் கருதி அந்த ரூபத்தில் அரசாங்கம் 'இம் மசோதாவை அமைத்திருப்பது வரவேற்கத் தக்கது என்று கூறிக்கொண்டு இதை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன்.

31st October 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தைப் பற்றி முன்பே நான் விளக்கியிருக்கிறேன். மூன்று நாட்களுக்கு கூட விடுமுறை நாட்களை அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான் அவர்களது திருத்தம். ஏழு நாட்கள் லீவ் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது, நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு ஏழு நாட்களாவது கொடுத்து விட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வந்தது. அதற்குமேல் கொடுப்பது என்றால், எத்தனை நாட்கள் கொடுத்தாலும் நல்லதுதான், விடுமுறை அனுபவிப்பவர்களுக்கு. ஆக, இந்த விடுமுறை நாட்களை அதிகப்படுத்துவது என்பது சரியல்ல. ஆகவே, நான் அதை எதிர்க்கிறேன். அடுத்தபடியாக, பழனிசுவாமி அவர்களின் திருத்தம், இப்பொழுது அவர்களுக்குள்ள உரிமைகள் பாதிக்கப்படக்கூடாதென்பது. அதைப்பற்றி இந்த மசோதாவின் 11-வது பிரிவில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தற்காலம் தொழிலாளர்கள் என்னென்ன விசேஷ சலுகைகளை அனுபவித்துக் கொண்டு வருகிறார்களோ அதற்கு எந்த விதத்திலும் பாதகம் ஏற்படாது. 11-வது பிரிவு அதை விளக்குகிறது. ஆகவே, இந்தத் திருத்தத்திற்கும் அவசியமில்லை. மற்றொன்று, பண்டிகை நாட்கள் விடுமுறை நாட்களில் வந்து விட்டால், ஞாயிற்றுக்கிழமைகளில் வந்து விட்டால் அதற்காக வேறு ஒரு நாள் லீவ் விட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்கு, ஒரு திருத்தம் வேண்டியதில்லை. ஆனால் தேசிய தினங்களைப் பொறுத்த மட்டில், ஜனவரி 26-ம் தேதி, ஆகஸ்ட் 15-ம் தேதி இவைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் வந்தாலும் அதற்காக வேறு ஒரு நாளில் விடுமுறை விட வேண்டுமென்று சொல்வது சரியல்ல. எந்த தினத்தில் அவைகள் வருகின்றனவோ அந்த தினங்களில்தான் அவைகள் கொண்டாடப் படவேண்டும், அந்த தினங்களை இன்னொரு நாளில் கொண்டாடலாம் என்று சொல்வது சரியல்ல. அவைகளை அன்றுதான் கொண்டாட முடியும். தீபாவளி, பொங்கல் போன்றவைகள் விடுமுறை நாளில் வந்து விட்டால், அதாவது ஞாயிற்றுக்கிழமையன்று வந்து விட்டால், ஆண்டு தொடத்கத்திலேயே வேறு விடுமுறை நாளை இன்னொரு நாள் என்று வைத்துக் கொள்ளலாம். அவ்வாறு பண்டிகை விடுமுறை நாட்கள் மொத்தம் ஐந்து நாட்கள் இருக்கலாம் என்பதுதான் இந்த மசோதாவின் நோக்கமாகும். அவைகளை வருஷந்தோறும் நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆகவே, இத்திருத்தத்திற்கு அவசியமில்லை.

The amendments were put and lost.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

Clause 5.

MR. SPEAKER : The motion is—

"That clause 5 do stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

"In sub-clause (2) (*a*), *after* the words 'twice the wages' *add* the words 'and dearness allowance' and in sub-clause (3) (ii) *for* the words 'thirty days' occurring in the proviso *substitute* the words 'twenty days'."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"In the proviso to sub-clause (3) (ii) *omit* the following words :—

'if he has not completed . . . such holidays'."

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment, Sir.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

" *For* sub-clause 3 (i), *substitute* the following, namely :—

' only at a rate equivalent to the daily average of his wages to be calculated in the prescribed manner '."

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், 5-வது கிளாஸில் சப் கிளாஸ்-2-ஏயில் " twice the wages " என்றிருக்கிறது. இதில் டீயர்னஸ் அலவன்-ஸை சேர்க்கவேண்டும் என்பது தான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். ஏன் இதைச் சொல்லுகின்றேன் என்றால் இன்றைக்கு சட்டங்கள் எல்லாம் வார்த்தைக்கு வார்த்தை, எழுத்துக்கு எழுத்து சரியாக இல்லாவிட்டால் பின்னால் வேறு விதமாக வியாக்கியானம் செய்யப்பட்டு சட்டத்தின் நோக்கத்திற்கே விரோதமாகப் போய்விடுகிறது. இது நான் சொல்லாமலே அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே இதோடு " டீயர்னஸ் அலவன்ஸ் " என்பதையும் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக சப்கிளாஸ் 3 (2)-ல் 30 தினங்கள் தொடர்ந்தாற்போல் வேலை செய்தவர்களுக்குத்தான் விடுமுறை கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்குமானால் தொழிலாளர்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படலாம். அதாவது லீவ் லெட்டர் எழுதிக்கொடுத்து லீவ் கொடுக்கப்பட்ட பிறகும் கூட ஆப்ஸென்ட் என்று போடப்படுகிறது சில நிறுவனங்களில். இவ்விதமான பல தொல்லைகள் நேரிடுவதற்கு வழியிருக்கிறது. ஆகவே தொடர்ந்து 30 தினங்கள் வேலை செய்திருக்கவேண்டும் என்பதை எடுத்துவிட்டு 20 தினங்கள் என்றாவது வைத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். ஆகவே இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : சபாநாயகர் அவர்களே, இந்த நல்ல மசோதாவில் ஒரு பெரிய குறை இருக்கிறது. அதாவது 30 நாட்கள் தொடர்ந்தாற்போல் வேலை செய்தால்தான் விடுமுறை கொடுக்கப்படும் என்று இருக்கிறது. இம்மாதிரியான விடுமுறை கொடுக்கவேண்டும் என்று கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பல மில்களிலும் இருந்து வருகிறது ஒரு வருடமாக. அதிலும் பல தகராறுகளும் தவறுகளும் ஏற்படுகின்றன. அதோடு இந்த விடுமுறை நாட்கள் அப்ரெண்டிஸ், டெம்பரரி வொர்க்கர்ஸ் போன்றவர்களுக்குக் கிடைக்குமா என்பது தெரியவில்லை. அதோடு பல தொழிலாளர்கள் ஸிக் லீவில் இருக்கலாம். அவர்களுக்கு இந்த லீவு கிடைக்குமா என்று தெரியவில்லை. ஆகவே 30 தினங்கள் வேலை செய்தால்தான் விடுமுறை கிடைக்கும் என்பதை எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். ஆகவே நான் இதைப்பற்றி அதிகமாக விளக்கவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இருந்தாலும் விடுமுறை தினத்திற்கு எந்த அடிப்படையில் சம்பளத்தை நிர்ணயிப்பது என்பதைச் சொல்லுவதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். தொழிலாளர்களுக்கு சில சமயங்களில் வருமானத்திற்கேற்ப சம்பளங்கள் குறைந்து போய்விடும். அதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். அவர்களாகவே ஆப்செண்டாக இருக்கிற சமயத்தில் சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்பது அல்ல என்னுடைய எண்ணம். சர்க்காருடைய விதிகளில் இந்த காலத்தின் சம்பளம் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை விதிகளில் குறிப்பிடப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். அதாவது சப்கிளாஸ் 3-ல் 1-வது பிரிவில் இப்போது

31st October 1958] [Sri M. Kalyanasundaram]

இருப்பதை மாற்றி **" Only at a rate equivalent to the daily average of his wages to be calculated in the presoribed manner "** என்று அமைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, வேஜஸ் என்றால் அதில் பஞ்சப்படி என்பதையும் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். இதைப்பற்றி இரண்டாவது கிளாஸில் (அதாவது டெபினிஷன் கிளாஸில்) தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் தனியாகச் சேர்க்கவேண்டும் என்பது அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக குறைந்தபட்சம் 30 தினங்களாவது வேலை செய்திருக்கவேண்டும் என்பது வேண்டியதில்லை, நேற்று வந்தாலும் சரி அவர்களுக்கும் விடுமுறை கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் மற்றொரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். வேலை செய்யாமல் அவர்களாகவே ஆப்செண்ட்டாக இருந்தால் " லே-ஆப் " சம்பள முறையில் கொடுக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இதைப்பற்றி விரிவாக விதிகளில் மாற்றம் செய்து கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Is hon. Member Sri Palanisami withdrawing his amendment?

SRI M. KALYANASUNDARAM : He is not pressing his amendment, Sir.

MR. SPEAKER : What is the difference between withdrawing and not pressing? In any case I will have to get the permission of the House.

The amendments of Sri V. K. Kothandaraman, and Sri N. K. Palanisami were, by leave, withdrawn.

MR. SPEAKER : I think the Government are accepting the amendment moved by Sri M. Kalyanasundaram. I shall put it to vote. The question is—

" *For* sub-clause (3) (i), *substitute* the following, namely :—

' only at a rate equivalent to the daily average of his wages to be calculated in the prescribed manner '."

The amendment was put and carried.

Clause 5, as amended, was put and carried.

Clauses 6 to 9 were put and carried.

Clause 10.

MR. SPEAKER : The motion is—

" That clause 10 *do* stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : Sir I move—

" *Omit* sub-clause (1)."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

(1) *Omit* sub-clause (1) (*a*).

(2) In sub-clause (1) (*c*), *omit* the words 'any industrial establishment . . . Reserve Bank of India.'

(3) *Omit* sub-clause (1) (*d*).

(4) *Omit* sub-clause (2).

MR. SPEAKER : The amendment falls through for want of a seconder.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த 10-வது கிளாஸில் சர்க்கார் நிறுவினங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் இருக்கும் லேபர் பாலிஸிக்கு நேர்விரோதமாக இருக்கும் என்பதை உணர்ந்து இதில் கொடுக்கப்பட்டிருக்கும் விதிவிலக்கை எடுத்துவிடவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். தயவு செய்து இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இதற்கு முன்பு குறிப்பிட்டிருக்கிற காரணத்தின்படி இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The amendment of Sri V. K. Kothandaraman was put and lost.

Clause 10 was put and carried.

Clause **11.**

MR. SPEAKER : The motion is—

"That clause **11** *do* stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

"*For* the words 'on the date' *substitute* the words 'before and after the date'."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்தச் சட்டம் அமுலான தேதி முதற்கொண்டு, இதற்கு முன்னால் அதிகப்படியான விடுமுறை கொடுக்கப்பட்டிருந்தால் அதுவும் நடைமுறையில் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தம் என்னவென்றால் இந்தச் சட்டம் வந்ததின் பின்னாலும் ஏதாவது அக்ரிமெண்ட் மூலம் 7 தினங்கள் விடுமுறை என்பதற்குப் பதிலாக 10 தினங்கள் விடுமுறை என்றோ அல்லது 15 தினங்கள் விடுமுறை என்றோ ஏற்படுத்திக்கொண்டால் அதையும் ஒப்புக்கொள்ளலாம் என்றிருக்கவேண்டும். ஆகவே என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இப்போது தொழிலாளர்கள் அனுபவித்து வருகிற சலுகைகளைப் பாதிக்கக்கூடாது என்று அதற்கு வேண்டியபடி அமைக்கப்பட்டிருக்கிறது. பின்னால் இதைவிட, அதிகச் சலுகைகளை, தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் சேர்ந்து இன்னும் எத்தனை சலுகைகளை வேண்டுமானாலும் அமைத்துக்கொள்ள

31st October 1958] [Sri M. Bhaktavatsalam]

லாம். இதைச் சட்டத்திலேயே போடவேண்டுமென்பது சரியல்ல. ஆகையால் கனம் அங்கத்தினர் அவர்களை இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was put and lost.

Clause 11 was put and carried.

Clause 12 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Bill, 1958 (L.A. Bill No. 19 of 1958), as amended, be passed."

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய 10-வது பிரிவிற்கான திருத்தத்தைப் பிரேரேபித்தவுடன் பக்கத்து அங்கத்தினர் செகண்ட் பண்ணி எழுந்தும் "ஸ்பீக்கர்ஸ் ஐ" சரியாக இல்லாத காரணத்தால் . . . .

MR. SPEAKER : I am sorry. I waited for two full minutes. If his supporters are not active, I cannot help. My eye is all right. (laughter). Only the quickness of support was not there.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தேசிய விடுமுறை தினங்களும் பாக்கி சர்க்கார் விடுமுறை நாட்களும் ஏற்கெனவே பாங்குகளில் வேலை செய்யக்கூடியவர்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்களுக்கு வீக்லீ ஹாலிடேஸ்கூட கிடையாது. ஸ்டேட் பாங்க், சென்ட்ரல் பாங்க், இவைகளுக்குத்தான் வீக்லீ ஹாலிடேஸ் இருக்கிறதே தவிர, சாதாரண பாங்குகளில் வேலை செய்யக்கூடிய குமாஸ்தாக்களுக்கு கிடையாது. பம்பாயை எடுத்துக்கொண்டால் அங்கு வாராந்திர விடுமுறை இருக்கிறது. சென்னையில் மட்டும் ஷாப் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ் ஆக்ட் இருந்தபோதிலும் அவர்களுக்கு வாராந்திர விடுமுறை சரியாகக் கிடைப்பதுகிடையாது. அவர்களுக்கு என் விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று தெரியவில்லை. அவர்களுக்கும் அவசியம் விடுமுறை கொடுக்க வேண்டும். அவர்களுக்கும் கொடுத்து இந்த மசோதா ஒரு வெற்றிகரமான மசோதாவாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

* SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் கோதண்டராமன் அவர்கள் தன்னுடைய திருத்தத்திலே ஒன்றை வற்புறுத்திப் பேசினார்கள். சில கம்பெனிகளில் சில தொழிற்சாலைகளில் இந்த மாதிரியான ஒரு சட்டத்தை அனுசரணையாக வைத்துக்கொண்டு, குறைந்தபட்சம் 7 நாட்கள்தான் பண்டிகை நாட்களாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவார்கள். அந்தக் கம்பெனிகளிலே—அல்லது தொழிற்சாலைகளிலே—அதிகப் படியான விடுமுறை நாட்கள் வாங்க முடியும், அதிகமான பண்டிகை லீவு வசதிகள் கொடுப்பதற்கு நிலைமை வசதியாக இருக்கலாம். வேண்டுமானால் கோர்ட்டுக்குப் போய் தொழில் கோர்ட்டுக்குப் போய், சச்சரவு ஏற்படுத்தி, தீர்ப்பு வாங்குவதற்குள்ள வசதி இந்தச் சட்டத்தின் மூலமாகப் பாதிக்கப்படுமா என்பதை இங்கே நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சில தொழிற்சாலைகளில் நாம் கோரிக்கை போட்டு அதிக வசதி வாங்குவது போல பண்டிகை நாட்களை அதிகமாக வாங்க முடியுமானால், அதை வாங்குவதற்கு ஏதாவது தடை இருக்குமா என்று அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. பழனிசாமி அவர்கள் பாங்குகளைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்த மசோதாவிலே ரிஸர்வ் பாங்கு என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற பாங்குகளுக்கு விதிவிலக்கு இல்லை. மற்ற பாங்குகளுக்கு விலக்கு இல்லை என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் பக்கிரிசாமி பிள்ளை ஒரு பிரச்னையைப்பற்றிக் குறிப்பிட்டார். பின்னால் தொழிலாளர்கள் வேறு புதிய சலுகைகளைப் பெறவேண்டுமென்றால் விடுமுறையைப் பொறுத்த மட்டில் எவ்வளவு தூரம் பாதிக்கும் என்று கேட்டார்கள். குறைந்த பட்சம் இந்த விடுமுறை கூட இல்லாதவர்களுக்கு அளிக்கவேண்டுமென்றுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறைந்த பட்சம் இவ்வளவு இருக்கவேண்டு மென்றுதான் இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நிலைமையைப் பொருத்து, சாமார்த்தியம் இருந்தால் புதிய சலுகைகளைப் பெற பிரயத் தனம் செய்யலாம். இருந்தாலும் கனம் அங்கத்தினர்கள் இந்த எழு நாட்களாவது கொடுக்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்தைப்பாராட்ட வேண்டும்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Bill, 1958 (L.A. Bill No. 19 of 1958) as amended, be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

(2) THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI), ESTATES LAND (REDUCTION OF RENT) AND ESTATES (SUPPLEMENTARY) (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 35 OF 1958).

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move :

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari), Estates Land (Reduction of Rent) and Estates (Supplementary) (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 35 of 1958) be taken into consideration."

The amendments proposed are found necessary as a result of the experience gained in the working of the Estates Abolition Act. Certain consequential amendments to the Madras Estates Land (Reduction of Rent) Act, 1947 and the Madras Estates (Supplementary) Act, 1956, are also proposed to be made. The various clauses of the Bill are explained in detail in the Statement of Objects and Reasons attached to the Bill. I shall now explain briefly the several Clauses of the Bill.

Clause 2.—Clause 2 seeks to amend section 8 (2) of the Abolition Act, so as to transfer the work of the two Estates Abolition Tribunals to the District Courts, with a view to abolish the Tribunals. The District Courts, will however be styled as Tribunals for the purposes of the Act. The clause also seeks to amend section 8 (4) of the Abolition Act, so as to empower the Tribunals with all the powers of Civil Courts. As the present Estates Abolition Tribunals are also performing certain functions under the Rent

Reduction Act and the Estates Supplementary Act, consequential amendments to these Acts are also sought to be made by clauses 13, 14 and 15.

Clause 3.—This clause seeks to amend section 10 (1) of the Abolition Act, so as to restrict to two months the further time which the Settlement Officer may, in his discretion, allow to the landholder of an under-tenure estate to apply to him for a decision as to whether the estate was created before or after the date on which the principal estate was permanently settled. In the case of estates already notified, the further time-limit will be two months from the date of coming into force of the proposed amendment.

Clause 4.—When the provision in clause (*d*) of section 20 (2) was introduced in 1956 the Government had in view the reckless forest leases granted by certain landholders. As however, forest leases can be dealt with under section 19-A, the provision in clause (*d*) of section 20 (2) is not necessary. Clause 4 accordingly provides for the deletion of this clause.

Clauses 5 *&* 6.—These clauses seek to introduce two new sections in the Abolition Act so as to provide that any person who had, immediately before the notified date, any right or interest in any land in an estate as a landholder, shall be deemed to be a landholder of that estate and that the ryotwari assessment imposed on, and the miscellaneous revenue derived from, all lands in the estate in respect of which the landholder is entitled to ryotwari patta under any provision of the Act shall be excluded in determining the basic annual sum. The reasons for the amendment are explained in the Statement of Objects and Reasons.

Clause 7.—At present, the compensation paid under section 5 (1) of the Rent Reduction Act is not being treated as " income from a source in the estate " within the meaning of section 38 (2) of the Abolition Act and is therefore not taken into account in computing the additional compensation payable under the latter section. The High Court has recently held that the compensation paid under section 5 (1) of the Rent Reduction Act should be taken into account in computing the additional compensation payable under section 38 (2) of Abolition Act. The Government also consider that, in fairness to the institutions entitled to tasdic allowance under the section, the allowance should be based on the average net annual income derived from the estate by the institutions during the faslis 1352 to 1356 which were years of normal seasons, and not the fasli years 1357 to 1362 which were years of drought. This clause seeks to amend section 38 (2) for the above purposes.

Clause 8.—This clause seeks to amend section 51 of the Abolition Act, so as to empower the Special Tribunal with all the powers of a civil Court.

[Sri M. A. Manickavelu] [31st October 1958

Clause 9.—Section 55 of the Abolition Act relates to the collection of the arrears of rent due to the landholder and section 56 was clearly intended to deal only with disputes relating to such arrears of rent. One of the Estates Abolition Tribunals has however taken the view that section 11 is not self contained in regard to grant of ryotwari pattas in respect of ryoti lands and that, if there is a dispute as to who among two or more claimants is entitled to ryotwari patta for a particular ryoti land, the Assistant Settlement Officer should deal with the case under section 56 (1) (*c*) and that against the order of the Assistant Settlement Officer there is an appeal to the Tribunal. Section 11 was intended to be a self-contained provision in regard to grant of ryotwari pattas in respect of ryoti lands in the occupation of ryots and the Tribunal's view does not give effect to the real intention behind the Act and implies that there is some overlapping between sections 11 and 56. Orders passed by the Tribunal in pursuance of its view has led to unnecessary litigation under section 56 and consequential delays. Experience has also shown that there are no disputes relating to arrears of rent for settlement under section 56. Hence this clause seeks to delete section 56. Pending proceedings under this section will abate on the date of commencement of the proposed amendment. Parties aggrieved by orders passed by the Assistant Settlement Officer under section 11 can move the higher authorities, viz., Settlement Officer, Director of Settlements and Board of Revenue, in revision.

Clauses 10 *&* 12.—Clause 10 seeks to introduce a new section in the Abolition Act embodying the general provision that, in computing the period of limitation for filing an appeal or revision under the Act, the time taken for communicating the copy of the order or proceeding against which the appeal or revision is filed and the time taken for the grant of certified copies of the order or proceeding should be excluded. Clause 12 makes consequential amendments to section 67 (2) (*e*) of the Abolition Act.

Clause 11.—This clause seeks to make certain verbal amendments to section 64 B.

Clause 16.—This clause seeks to make certain provisions consequent on the introduction of new section 64-BB in, and the amendment to, section 38 (2) of the Abolition Act.

It will thus be seen that all the amendments are necessary for the proper and effective administration of the Estates Abolition Act and the two connected Acts and I commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari), Estates Land (Reduction of Rent) and Estates (Supplementary) (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 35 of 1958), be taken into consideration".

31st October 1958]

* SRI R. SRINIVASA IYER: Sir, the amendments that are now proposed are long overdue. In fact, the Andhra State has already amended the Estates Abolition Act of 1948 by substituting a one-man tribunal in the place of the three-man tribunal that is functioning now. The reason for substituting this one-man tribunal has been clearly stated in the Statement of Objects and Reasons. With reference to the establishment of the tribunal under section 8—for appointing District Judges in each area—there is also a proposal that in heavy districts, a separate District Judge will be appointed. While appointing a Judge either under the old Act or under the present Bill, any officer who is a District Judge or who can be appointed as a District Judge or is fit to be appointed as a District Judge, may be appointed and he having the same powers as the tribunal has now, whethear he is a temporary District Judge or a permanent District Judge. Sir, some objections have been voiced forth by the public that this procedure is likely to entail delay in the disbursement of compensation and particularly final compensation. Applications for issue of cheques for compensation are sent by post. Under the rules now existing they can be sent by post to the Tribunal, now working either at Madurai or Vellore. The objection voiced forth by the public is that if cheque applications have to be presented in person or through a lawyer, sometimes for paltry sums—before the District Judge, it will entail expense and delay. I hope that when these Tribunals are constituted for each district by appointing the District Judge of the particular district or a separate District Judge for a heavy district, as the case may be, the same rules for the sending of cheque applications will be continued even after the amendment is brought into force.

Another point about this one-man tribunal is that appeals and applications or petition for revision, can be presented or sent to them by post. Under the Code of Civil Procedure if a District Judge is to be the Tribunal no application can be received by post. I suppose that this difficulty also will be overcome by continuing the present position, by permitting the sending of applications appeals, etc., under the Estate Abolition Act by post. The fear that there will be delay in the disbursement of these compensations is not well founded. There will not be much delay provided the applicant takes proper steps to have his petition made in time and presented in time. Therefore if the present rule is adopted to the applications and orders, there will be no difficulty and the public agitation—some members of the public have also distributed printed notices to all M.L.As. of this Assembly—is not well founded.

Sir, I would point out that the present Act has almost worked itself out. Advance compensation has been disbursed almost and very few applications remain; and when final compensation is either calculated or deposited, the final compensation will not be

very much in addition to the additional compensation and perhaps some people who have already received additional compensation may have to refund it. Therefore, when these additional District Judges are appointed I would pleade as a matter of economy, that they need not be wholetime Tribunals in respect of this Act alone; they may also be invested with other powers to relieve the congestion in Civil and Sessions work in that particular district.

Sir, with reference to the new clause 64-BB, I am glad that the Government are bringing forward the very same amendment which I had suggested. A number of appeals have been dismissed for not fault of the appellants though under, the rules the concerned sections of the Limitation Act the time limit for appeals or applications presented after the time limit has been extended. Section 15 (2) of the Act was amended in 1954. Still many appeals were dismissed. If this aspect had been considered—by excluding the time taken for supplying copies, time taken for sending copies of the orders of the Assistant Settlement Officer by registered post acknowledgement due as is required by rule 5 of the rules framed under the Act, and the time occupied for the applications to be made—this would not have happened.

I am glad that the Government have also brought forward clause 16 under which any appeal or appplication for revision which has been disposed of before the date of the commencement of section 10 of this Act could be re-opened and disposed of on application by the aggrieved person.

With reference to clause 15 which limits the jurisdiction of the Tribunal, I wish to make a submission. Now, compensation is deposited by the Director of Settlements. It is published in the Gazette. This publication is taken to be sufficient notice to the landlord or landholder. They have prescribed three months for the purpose of drawing this paltry amount of compensation. Really, it is only a paltry sum that is sought to be paid to the landholders as compensation. If they did not apply within these three months, the money goes back to the Government and it is lost to them. Here also, the Tribunal is given very limited powers to extend the time. I respectfully submit that in all such cases, where notice is not given to the landholders, not even by the village officers, it is not proper to deprive them of the compensation amount merely because they did not apply within the time prescribed. After all, it is a paltry sum that is paid to the landholders in respect of the compulsory acquisition of their rights to property. It is something like giving one thing by one hand and taking it away by another. This position should change and the relevant clauses need early amendment. It is only because of a recent amendment of a particular section with reference to the payment of compensation, this difficulty has cropped up. Many applications have been disposed of and Writ Petitions had to be filled with reference to the payment of money into Court, which

31st October 1958] [Sri R. Srinivasa Iyer]

is due to a particular party by the Government. We have got rules and provisions governing the deposit of money in a Civil Court. For example, if till three years after the deposit of a particular sum, the party who was entitled to that sum did not come forward to draw that sum from the Court, it will lapse and go back to the Government. There is also the alternative for getting the money back even after it had been lapsed to Government. The party concerned will have to apply for the same and the matter will go to the Accountant-General who will make necessary budgetary provision in the next year's budget and the money will thus be paid to the party concerned after the observance of various formalities. In such cases of deposits under the Limitation Act the time allowed is 30 years, I think. I request the Government not to deprive the landholders of compensation who failed to apply for drawing it in due time as fixed under the Act. I know that this matter does not come within the purview of this Bill. I am mentioning this in this connection because of the presence of the Director of Settlements and other Officials of the Revenue Department and also the Minister for Revenue. I want them to appreciate this difficulty experienced by the landholders and try to remove it. I appeal to the Government to make due provision at least in the rules by their rule-making powers for paying to the landholders the deposits of compensation amounts. Let them at least provide this for interim payments every year as a sort of solatium in respect of the rights of the landholders which have been taken away by the Government. Let them not deny these amounts to the landholders merely for the reason that they have not applied for the same in time. This compensation is payable to them under the Constitution and under the Act. That cannot be legally denied to them by amending certain sections of the Act. Merely because they do not apply for the same within the prescribed time, it cannot be totally denied to them.

With reference to the application for ryotwari pattas, there is a difficuulty. Action is sought to be taken under the rule-making powers. I do not proceed to argue whether they are *intra vires* or *ultra vires*. No application for a ryotwari patta can be made after the Final Settlement Enquiry is over. This enquiry goes on for several months. Even during the enquiry, if an application is made, there is difficulty in getting the patta. There are also cases in which *bona fide* persons who are legally entitled to the ryotwari patta have not been given the same merely because they have not applied for it in time. These are all very hard cases. Now, we have had the experience of working this Act for about 10 years. We have been bringing forward amendments for giving effect to the provisions of this Act and for achieving the purposes for which this Act was enacted. The rights conferred on the landholders under the Act are sought to be taken away under rules framed under the very Act.

[Sri R. Srinivasa Iyer] [31st October 1958

Sir, the procedure prescribed in clauses 5 and 6 is not very clear. The language used in these clauses is not clear. Here is a case in which a ryot purchased the landholder's rights in a village. The Tribunal considered that he was only a ryot under section 6-A of the Estates Land Act as he had only purchased the rights of a landholder and he was not a landholder entitled to compensation. The matter was taken in appeal to the High Court. The High Court said that though he was a ryot under section 6-A of the Estates Land Act, and he does not lose the character of a ryot on purchasing the right of the landholder yet his rights as a landholder are also available to him and that he is entitled to a share in the compensation. The compensation is worked out only on the basis of the land revenue payment on ryoti lands in the estates. Thus, he continues to be a ryot though he is declared to be a landholder on purchasing the rights of the landholder and he is entitled to ryotwari patta under section 11. He is entitled to ryotwari patta under section 11 only and not under section 15. This must be clearly understood. He has no doubt a right and share in the compensation according to the High Court's ruling. Clauses 5 and 8 deal with zamindari and inam estates respectively. The language used in these clauses is rather dubious. What I wish to point out is this. The ryot, though he is strictly not a landholder under section 15 of the Act, he will be entitled to ryotwari patta. I think when final compensation is paid, this factor will be taken into consideration. The position will have to be made clear. In clause 6 (2), it is stated—" The ryotwari assessments imposed on, and the miscellaneous revenues derived from all lands in an inam estate in respect of which, the landholder mentioned in sub-section (1) is entitled to ryotwari patta under any provision of this Act, shall be excluded in determining the basic annual sum." There are cases in which the landholder holds the melwaram right only and also cases in which he holds both melwaram and kudiwaram rights. If the calculation has got to be made according to this sub-clause, the language is not clear. Let there not be any complication in regard to this matter. I have not moved any amendment because only after a very careful study of the provisions, I was able to notice these points which I have just now placed before the House. I request that the language used here may be made clear or at any rate the Government may so frame the rules as to make the position clear so that nobody may be at a serious disadvantage. I do not want that this Bill should get delayed. It is enough if they clarified the position in the rules. It should be made clear that the person who is declared to be landholder under clauses 5 and 6 will only be governed by section 11 and not by section 15.

12-30 p.m. The other point that I wish to urge is with reference to religious endowments. Religious endowments have lost most of their income. I know that temples which had six or seven villages

have been forced to cut down the number of 'kalams' in which puja or worship was performed. There is one big temple in Memisal which had six villages and which has no paddy now for 'Neivediyam' from those villages. The amendment proposed to section 38 of the Abolition Act by clause 7 provides for the rent lost by temples under the Rent Reduction and Abolition Acts being taken into consideration and the Tasdik allowance enhanced. This is a necessary provision.

About section 56, it has given room for lot of litigation. I am glad that the Government have realised this and come forward now to remove this enigmatic section. Several judges have given out different judgments. Even recently, in the High Court, two judges have differed on the point whether a Civil Court has jurisdiction to consider whether a person is entitled to ryoti land and a ryotwari patta or not. Now that the Government have come forward to remove this section 56, though late it is, many of the writ petitions which are now pending before the High Court contending that the Civil Court has juirsdiction in such cases may go.

